Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 30 ஞாயிற்றுக்கிழமை (13.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 167

# புலிகளின் வான் பலத்தை முறியடிக்க

# அமெ. பாதுகாப்பு அதிகாரிகள் உதவுவர்

## உயர் மட்டக் குழு அடுத்த வாரம் இலங்கைக்கு

கொழும்பு,மே13

**விடுதலைப் புலிகளின் வான் படைப் பலத்தை முறியடிப்பது குறித்து இலங்கைப் படை அதிகாரிகளுக்கு நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்காக, அமெரிக்காவின் உயர்மட்ட பாதுகாப்பு நிபுணர்கள் அடுத்த வாரம் கொழும்பு வருகிறார்கள்.**

**இலங்கை அரசாங்கம் விடுத்த அவசர கோரிக்கையைத் தொடர்ந்தே அமெரிக்கப் பாதுகாப்பு உயர் அதிகாரிகள், புலனாய்வு நிபுணர்கள் கொண்ட குழு இங்கு வர இருப்பதாக அறியப்படுகிறது.**

ஹவாயில் அமைந்துள்ள அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தளத்தைச் சேர்ந்த நிபுணர்களும் அதிகாரிகளுமே இங்கு வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் வான் பலத்தை முறியடிப்பதற்கான உத்திகள் , செயற்பாடுகள், எதிர்ப்பு நடவடிக்கைகள் என்பன குறித்து அமெரிக்க நிபுணர்கள் ஆலோசனைகளை வழங்குவதோடு பயிற்சிகளையும் வழங்குவர் என்று அறியப்படுகிறது.

**இலங்கை ஆயுதக் கொள்வனவு இந்த வருடத்தில் 40% அதிகரிப்பு**

இதேவேளை -

இலங்கைக்கான அமெரிக்காவின் ஆயுத மற்றும் இராணுவ தளபாட விற்பனை இந்த வருடத்தில் 40 சதவீதம் உயர்ந்துள்ளதாக பாதுகாப்புத் தகவலுக்கான மையம் அறிவித்திருக்கிறது.

வாஷிங்ரனில் இயங்கும் இந்த மையம் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு சர்வதேசப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் என்பன சம்பந்தமாக நிபுணத்துவப் பகுத்தாய்வு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நிறுவனமாகும். பாதுகாப்புத் தகவல் மையம் தலைசிறந்த பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட நிபுணத்துவ மூளைசாலிகள் குழுவாகும் (Think Tank).

பாதுகாப்புத் தகவல் மையத்தின் பிந்திய அறிக்கையின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் அமெரிக்கா 60.8 மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை இலங்கைக்கு விற்பதற்கு ஏற்பாடாகி உள்ளது.

இதேவேளை கடந்த வருடத்தில் - 2006 ஆம் ஆண்டில் - 1.4 மில்லியன் டொலர்களுக்கு மட்டுமே இலங்கைக்கு ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்டதாக பா.த. மையத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் ஆயுதப் படைகளுடன் சேர்ந்து இயங்கும் துணைப்படைகள் 18 வயதுக்குக் குறைந்தவர்களை அதிக எண்ணிக்கையில் தமது குழுக்களுடன் இணைத்துக்கொள்வதும் இலங்கையின் ஆயுதக் கொள்வனவு அதிகரிப்பதற்கு ஒரு காரணம் என்றும் அமெரிக்கப் பாதுகாப்புத் தகவல் மையத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிடம் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் 25 நாடுகளில் 13 நாடுகளில் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் படைக்குத் திரட்டப்பட்டு வருவதாகவும் அதே அறிக்கை கூறுகிறது.(அ)

# கூட்டுப்படைகளின் தளபதியுடன் இராணுவத் தளபதி யாழ். விஜயம்

கொழும்பு,மே13

கூட்டுப்படைகளின் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா மற்றும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் நேற்று குடாநாட்டுக்கு விஜயம் செய்தனர்.

குடாநாட்டின் பர்துகாப்பு நிலைமைகள் குறித்து ஆராயும் பொருட்டு இந்த விஜயத்தை படைத் தளபதிகள் மேற்கொண்டனர் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த இவர்களை யாழ். மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் பி.ஏ.சந்திரசிறி உள்ளிட்ட படை அதிகாரிகள் வரவேற்றனர்.

பலாலிப் படைத்தளத்தில் படை அதிகாரிகளுடன் குடாநாட்டு பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் உணவு நிலைமைகள் குறித்து அவர்கள் இருவரும் கேட்டறிந்தனர்.

குடாநாட்டில் படையினரால் மீட்கப்பட்ட ஆயுதங்களும் படைத்தளபதிகளுக்குக் காண்பிக்கப்பட்டது. (அ-சி)

# கிழக்கு இன்னும் சில தினங்களில் முற்றாக மீட்கப்படும்; அதன் பின்னர் அங்கு மாகாண சபைத் தேர்தல்

## தளபதி பராக்கிரம சொல்கிறார்

கொழும்பு,மே13

கிழக்கில் இருந்து இன்னும் சில தினங்களில் விடுதலைப் புலிகளை முற்றாக விரட்டி விடுவோம். அதாவது கிழக்கு முற்றாக மீட்கப்பட்டுவிடும். அதன் பின்னர் மக்கள் தமது பிரதிநிதிகளை தேர்தல் மூலம் தெரிவு செய்யும் வாய்ப்புக் கிடைக்கும்.

கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய மேற்கண்டவாறு பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கில் விடுதலைப் புலிகளை விரட்டிவிட்டோம். அவர்கள் இப்போது தொப்பிகல காட்டில்தான் உள்ளனர். அங்கிருந்தும் மிக விரைவில் அவர்களை விரட்டி விடுவோம் - என்றார் அவர்.

கிழக்கில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவிருப்பதாக அரசியல் கட்சிகள் தெரிவித்துவரும் வேளையில் கிழக்குத் தளபதி இத்தகவலை வெளியிட்டுள்ளார் என செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதேவேளை, வாகரையில் 15 ஆயிரம் பேரை மீளக்குடியமர்த்தியுள்ளோம். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள்பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று 233 ஆவது படையணித் தளபதி வி.அனுர சுதசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதத்தில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகள் விரட்டியடிக்கப்பட்டுவிட்டதாகவும், தொப்பிக்கல காட்டுப்பகுதில் நூற்றுக்கணக்கில் உள்ள அவர்கள் மிக விரைவில் விரட்டப்படுவர் என்றும், அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்த முடியுமென்றும் கூறியிருந்தமை தெரிந்ததே. (1)

# ஒட்டுசுட்டானில் இரு தடவைகள் விமானத் தாக்குதல்

கிளிநொச்சி,மே13

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்றுக்காலை இரு தடவைகள் கிபிர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது முதலில் காலை 6.30 மணிக்கும் மீண்டும் 6.45 மணிக்கும் இரு தடவைகள் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்ததால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

# விடுதலைப் புலிகளின் பிந்திய விமானத் தாக்குதலால் 'ஷெல்' நிறுவனத்துக்கு 70 மில்லியன் டொலர் நட்டம்

கொழும்பு,மே13

விடுதலைப் புலிகளின் விமானங்கள் கடந்த 28ஆம் திகதி முத்துராஜவெலப் பகுதியில் அமைந்துள்ள 'ஷெல் காஸ்' நிறுவனத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலினால் அந்த நிலையத்தின் தீயணைப்பு வசதிகள்முழுமையாக செயலிழந்துவிட்டன.

இதனால் அந்த நிறுவனத்துக்கு சுமார் 70 மில்லியன் டொலர்கள் பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை அந்த நிறுவனத்தின் ஸ்ரீலங்கா இயக்குநர் ஹசான் மடானி தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது-

ஆரம்ப கணக்கெடுப்பின்படி குண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட இழப்புக்கள் அதனைச் சீர்செய்தவற்கான செலவுகள் சுமார் 70 மில்லியன் டொலர் தேவையாகவுள்ளது. ஆனால் இப்போது உடனடியாக இது குறித்த துல்லியமான இழப்புக்களின் பெறுமதியினை குறிப்பிடமுடியாமல் உள்ளது.

இதனை நாம் முழுமையாக திருத்தி முடிப்பதற்கு சுமார் நூறு மில்லியன்கள் டொலர் வரை தேவைப்படலாம். புலிகளின் இந்தத் தாக்குலின்போது நிறுவனத்துக்குச் சொந்தமான தீயணைப்புப் பிரிவு ஒன்று முழுமையாக சேதமடைந்துவிட்டது.

அங்கிருந்த நான்கு எரிவாயு தாங்கிகளில் ஒன்று குண்டுத்தாக்குதலின் போது சிறிய சேதம் ஏற்பட்டதால் அதுவும் இயங்கவில்லை. அதனை இம்மாத இறுதிக்குள் சீர் செய்துவிடுவோம் - என்றார்.

'ஷெல் காஸ்' நிறுவனத்திற்கு அருகில் அமைந்துள்ள இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எண்ணெய்க்குதம் மற்றும் இலங்கை அரசுக்குச் சொந்தமான பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எண்ணெய்குதம் ஆகியன மீதும் விடுதலைப் புலிகளின் விமானங்கள் வீசிய குண்டுகள் விழுந்தன. ஆனால் அவை தமக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்த விவரங்களை இன்னும் வெளியிடவில்லை. (அ-சி)

## வல்வையில் குண்டுவெடிப்பு

உடுப்பிட்டி,மே13

வடமராட்சி, வல்வெட்டித்துறைச் சந்தியில் பொலீஸ் நிலையத்துக்கு அண்மையில் நேற்றுமுற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற பெரும் குண்டுச் சத்தம் காரணமாக அப்பகுதில் பெரும் பதற்றம் நிலவியது.

இச்சத்தத்தைக் கேட்டு மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இப்பாரிய சத்தம் ஏற்பட்டமைக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

(அ-203-155)

## பயணிகள் கப்பல் சேவை நேற்றுத் தொடக்கம் தற்காலிக நிறுத்தம்

திருகோணமலை,மே13

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'கிறீன் ஓஷன்' பயணிகள் கப்பல் சேவை நேற்றுமுதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தால் கப்பல் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக திருகோணமலை பிரதேச செயலகத்தில் அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவன் பகீரதன் விடுதலை

கொழும்பு,மே13

கடந்த ஓகஸ்ட் மாதம் யாழ். பல்கலைக் கழகத்தில் வைத்து கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.பகீரதன் கொழும்பு நீதிவான் திருமதி சரோஜினி குசலவர்த்தன வினால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழகம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டபோது கைதுசெய்யப்பட் இவர், மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந் தார்.

'மக்கள் படை'யின் துண்டுப்பிரசுரங்களை வைத்திருந்தார் என்று இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் படைநகர்வு; முறியடித்தனர் புலிகள்

கிளிநொச்சி,மே13

மன்னார் மாவட்டத்தில் விளாத்திக் குளம் பகுதி ஊடாக பரசங்குளம் பகுதியை நோக்கி நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் முன்னேறிய படையினரின் நகர்வை முறியடித்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடும் ஷெல் தாக்குதலுடன் முன்னேறிய படையினருக்கும் தமது அணியினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது என்றும் -

படையினரின் நகர்வு முறியடிக்கப்பட்டது என்றும் - விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் குறித்து அரச தரப்பில் இருந்து இச்செய்தி எழுதப்படும் வரை தகவல் எதுவும் வெளியாகவில்லை.(அ-1)

## மருதமுனையில் இரு மின்மாற்றிகள் குண்டுவைத்துத் தகர்ப்பு

அம்பாறை மாவட்டத்தில் கல்முனைப் பிரதேசத்தில் மருதமுனை பகுதியில் நேற்றுக் காலை சுமார் 5.55 மணிக்கு நேரக் கணிப்புக் குண்டுகள் வெடித்ததில் இரு மின்மாற்றிகள் தகர்ந்தன.

மருதமுனை ஆஸ்பத்திரிக்கும் பெற்றோல் நிலையத்துக்கும் அருகில் அமைந்துள்ள மின்மாற்றிகளே குண்டுகள் வெடித்துச் சேதமடைந்தன.

இக்குண்டுகள்வெடித்ததால் மருதமுனை ஆஸ்பத்திரி உட்பட அந்தப் பகுதியில் பல இடங்களில்வசிப்பவர்களுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள் ளது.

மருதமுனையின் மற்றொரு பகுதியில் உள்ள மின்மாற்றியில் பொருத்தப்பட்டிருந்த குண்டு படையினரால் மீட்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## பாராட்டி வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்

பிரம்மோ உபதேச உபநயன விழா
பிரம்மஸ்ரீ வ.சுதர்மன சர்மா அவர்களுக்கு
கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சு.வரதராஜசர்மா - சுதாமதியம்மா தம்பதியரின் செல்வப் புதல்வன்
**பிரம்மஸ்ரீ வ.சுதர்மனசர்மா**
அவர்களுக்கு இன்றைய தினம் நிகழுகின்ற பிரம்மோ உபதேச உபநயன விழா சிறப்புற அமைய வேண்டும் எனவும் பிரம்மஸ்ரீ வ.சுதர்மன சர்மா அவர்கள் சமஸ்கிருதங்கள் எல்லாம் கற்றுப் பாண்டித்தியம் பெற்று சைவ ஆகம விதிமுறைப்படி எல்லாவற்றுக்கும் முதன்மையான இறைவனை அர்ச்சிக்கும் தொண்டில் ஈடுபட்டு சகல சௌபாக்கியங்களும் பெற்று சிறப்புற வாழ வேண்டும் என எல்லாம்வல்ல காமாட்சி அம்பாளின் அருளாசி கிடைக்கப்பெற அம்பாளைப் பிரார்த்தித்து வணங்கி ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

தாவடி கிழக்கு, கொக்குவில். **ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையினர்.**

## கட்டுரை

உள்ளே மூன்றாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள பூமியின் வெப்பம் அதிகரிப்பது தொடர்பான கட்டுரையைத் தொகுத்து எழுதியவர் **அச்சுதன்.**

## List of vacancies for Engnieers & Quantity Surveyors in MiddleEast is available. Please contact us.

**Chairman,**
**The Institution of Engineers, Srilanka**
**(Northern centre)**
**06, Nallur Cross Road, Nallur, Jaffna.**

## தவறிவிட்டது

வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டை என்ற முகவரியைச் சேர்ந்த நவரத்தினம் கருணா என்பவரது தேசிய அடையாள அட்டை (715680580V) இம்மாதம் 8ஆம் திகதி, நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலுக்கும் யாழ்ப்பாண நகரத்திற்கும் இடையே கைப் பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ( உதயன் அலுவலகத்தில்) அல்லது பாரதி பதிப்பகம், கே.கே.எஸ். வீதி என்ற விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## CHAM COMPUTER GOAL

DUTCHU ROAD, CHAVAKARCHCHERI, JAFFNA, SRI LANKA
TP : 0776125811, 0778449543, FAX :0602213571,

2007

புதிய கணனி வகுப்புக்கள் ஆரம்பம்

- பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புக்கள்
- சிறுவர்களுக்கான வகுப்புகள்
- அலுவலக ஊழியர்களுக்கான வகுப்புகள்
- வர்த்தகர்களுக்கான வகுப்புகள்
- கணனிப்பிரியர்களுக்கான வகுப்புகள்
- சன்றிதழ்களுக்கான வகுப்புகள்

வகுப்புகள் ஆரம்பம் : **18.05.2007 – 2.30** பி.ப

டென்மார்க் *DK AEC* கணனி நிறுவன அனுசரணையுடன், இணைந்து அதன் நட்பு நிறுவனங்களின் உதவியுடன் " CHAM COMPUTER GOAL" உங்களை கணனி உலகுக்குள் உறுதியுடன் அழைத்துசெல்ல தன் சேவைக்கரங்களுடன் தயாராகியுள்ளது.

**மேலதிக தகவல்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.**
விண்ணப்பப் படிவங்களை, பொதிகை புத்தகநிலையம்,கண்டி வீதி சாவகச்சேரி , LOTUS & SHAN COMPUTRE WIN , இராமலிங்கம் வீதி சாவகச்சேரி இலும் பெற்றுக்கொள்ளலாம்.

CHAM COMPUTER GOAL
டச்சு வீதி , சாவகச்சேரி.

## சலுகைக் கட்டணத்தில்.....

## இராசமாணிக்கம் கல்யாண மண்டபம்

அச்சுவேலி - குளிரூட்டப்பட்டது



எமது வாடிக்கையாளர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு சித்திரைப் புத்தாண்டில் இருந்து இராசமாணிக்கம் கல்யாண மண்டபம் தனது சேவைகளை சலுகைக் கட்டணத்தில் வழங்கி வருகின்றது என்பதை மன மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**வீடியோ கலாமினி**
077 3053080 அச்சுவேலி 0602212431

## அரிசி ஆலை விற்பனை

பருத்தித்துறை, V.M.Road இல் சகல வசதிகளும் கொண்ட நவீன இயந்திரங்கள் பூட்டப்பட்ட அரிசி ஆலை விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0777 301248**

## வாடகைக்கு

சிறி நதியா புதிய கட்டடம், ஸ்ரான்லி வீதி (வின்சர் சந்தி) இரண்டு கடைகள் வாடகைக்கு விடப்படும்.
விபரங்களுக்கு:
**தொ.பே.: 021 222 2709**

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சதாசிவம் சன்முகம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மலர்வு 18.08.1933
உதிர்வு 11.05.1999
திதி: 13.05.2007

ஆண்டுகள் எட்டு கடந்தாலும்
எட்டாத துயரத்தில் துவழ்கின்றோம்

"குமரபதி"
மீசாலை மேற்கு,
மீசாலை.
**குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு/வாடகைக்கு

NPHX தொடரிலக்க முடைய Fiero TVS மோட்டார் சைக்கிள், 1215 Canon photo copy mechine CD'S (DVD, VCD, MP3), CD Cover, Phone Cover என்பன விற்பனைக்கும்,
- மற்றும் சாரையடி, பருத்தித்துறை பிரதான வீதியில் கைக்கின் உதிரிப்பாகங்களுடன் கூடிய கடை வாடகைக்கும் உண்டு.

தொடர்பு:
021 226 5898

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.07.1924
மறைவு 24.04.2006

திதி: அபரபக்க துவாதசி

## நல்லதம்பி வீரசிங்கம்

ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டானாலும்
அனைவருக்கும் நீங்கள் ஆசான்
அன்பு தோய்ந்த உங்கள் முகம்
அரவணைக்கும் உங்கள் பேச்சு
அனைத்தும் இப்போ எங்கே போச்சு
உங்கள் நிமிர்ந்த நடையும்
நேர் கொண்ட பார்வையும்
தாழாமல் கடவுள் தன்னுடன் அழைத்தானோ
உங்கள் நினைவுடனும் நன்றியுடனும்
உங்கள் ஆத்மா சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

12, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை.
**உங்கள் பிரிவால் துயருறும், குடும்பத்தினர்.**

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி பிரதான வீதியில் பழைய டிஸ்பென்சரி முன்னால் உள்ள காளிகோவில் வீதியில் பிரதான வீதிக்கு அண்மித்ததாகவும் சகல வசதிகளுடன் கூடியதாகவும் நல்ல சுற்றாடலில் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட 5 1/2 பரப்புக் காணியுடன் அமைந்த ஓடு போட்ட பெரிய கல்வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.


தொடர்பு:
திருமதி கந்தசாமி இரத்தினேஸ்வரி,
பிரதானவீதி,
சித்தன்கேணி.
தொ.பே.021 222 5263

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குழியில் பாடசாலைகளுக்கு அருகில் பயன் தரு மரங்களுடன் 31/2 பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு தரகர் தேவையில்லை

தொடர்பு:
222 8302
(மாலை 6 மணிக்குப் பின்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**கணபதி ஜயாங்கன்**
(சோலை)

பிறப்பு 1942.10.15
இறப்பு 2007.04.13

இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உதவிகள் பல செய்த உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டியும் வீட்டுக் கிருத்தியக்கிரியைகளும் இன்று (13.05.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அனைவரும் வருகைதந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.
**குடும்பத்தினர்.**

விரும்பியோ விரும்பாமலோ மனிதனின் பரிணாம வளர்ச்சியில் கணனி முக்கிய இடம் பிடித்துவிட்டது!
பின்வரும் கற்கை நெறிகளில் ஒன்றைத் தெரிவு செய்து இன்றே இணையுங்கள்




CB Computer Academy
Station Road, Kondavil. ☎: 021-4590291

## வீடுகள் வாடகைக்கு

கண்டி வீதி, அரியாலை (மாம்பழம் சந்திக்கு அருகில்), கண்டி வீதி, யாழ்.கச்சேரிக்கு அருகில் பெரிய மேல்மாடி வீடு (நிறுவனங்களுக்கு உகந்தது).

A.V றோட், அரியாலை வீடு (கடையுடன்) ஆகிய பகுதிகளில் வீடுகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: **ஆ.தேவராஜா**
422/2, கண்டி வீதி, அரியாலை.
தொ.பே: 021 222 6273
(மாலை 7 மணிக்குப் பின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியின் வெப்பம் அதிகரித்து வருகிறது; ஆசியாவில் பசிபட்டினி தலைதூக்கும் அபாயம்!

## எச்சரிக்கிறார்கள் ஐ.நா. காலநிலை ஆய்வுமன்ற விஞ்ஞானிகள்

அரசியல், பொருளியல், சமய மற்றும் மொழி தொடர்பான குரோதங்களால் சீரழிந்து கொண்டிருக்கும் இலங்கை போன்ற ஆசிய நாடுகளை மேலும் ஓர் ஆபத்து நெருங்கிக் கொண்டிருப்பதாக ஐ.நா. விஞ்ஞானிகள் குழுவொன்று எச்சரிக்கை செய்துள்ளது.

காலநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றம் காரணமாக ஆசிய நாடுகள் அனைத்துமே இந்த ஆபத்துக்குள்ளாக நேரும் என்று அந்த விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமியின் வெப்பநிலை அதிகரித்து வருவது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆய்வுமன்றம் தனது அறிக்கையை கடந்த 6ஆம் திகதி வெளியிட்டது. ஐ.நா. ஆதரவிலான இந்த சர்வதேச ஆய்வுமன்றத்தில் 2 ஆயிரத்து 500 விஞ்ஞானிகள் இணைந்து செயல்படுகின்றார்கள். இந்த மன்றத்தின் தலைவராக ராஜேந்திர பச்சூரி என்ற விஞ்ஞானி இருந்துவருகின்றார்.

### ஆசிய நாடுகளில் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள்

காலநிலை மாற்றத்தின காரணமாக ஆசிய நாடுகளில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும், தண்ணீர்ப் பஞ்சம், வெப்ப அலைவீச்சு, வெள்ளப்பெருக்கு போன்ற அனர்த்தங்கள் ஏற்படும். இந்த காலநிலை மாற்றங்களின் காரணமாக ஆசியா முழுவதிலுமுள்ள இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து செல்ல நேரும் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூகோளம் வெப்பமடைவதனால் ஆசிய நாடுகளில் மழைவீழ்ச்சி குறைவடையும், விவசாய உற்பத்திகள் பெருமளவில் பாதிப்படையும், உணவுக்கும் தண்ணீருக்கும் பெரும் தட்டுப் பாடு ஏற்படும் என்று அறிக்கை தெரிவிக்கின்றது.

### உணவு உற்பத்தி வெகுவாகக் குறையும்

பிரஸல்ஸ் நகரில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டதை அடுத்து ஆய்வு மன்றத்தின் தலைவர் ராஜேந்திர பச்சூரி கடந்த செவ்வாய்க்கிழமை பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்தபோது:

''நாம் வெளிப்படுத்த விரும்புகிறது என்னவென்றால் ஆசியாவில் உணவு தானிய உற்பத்தி வெகுவாகக் குறைந்துவிடும் என்பதாகும்.... தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் மழையை நம்பிப் பயிரிடப்படுகின்ற கோதுமை உற்பத்தி மிக மோசமாகப் பாதிக்கப்படலாம். பஞ்சம், பட்டினி ஏற்படக்கூடும். தண்ணீர் தட்டுப்பாடும் உருவாகும்'' என்றார்.

அத்தோடு மட்டுமல்ல, குளிர்கால வெப்பநிலையில் ஓர் அரை பாகை செல்சியஸ் கூடினாலும் கோதுமை உற்பத்தி அளவில் ஹெக்ரயருக்கு 0.45 தொன் வீழ்ச்சியடையும் என்று கூறினார் பச்சூரி.



ராஜேந்திர பச்சூரி

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

தற்பொழுது இந்தியாவில் ஹெக்ரயருக்கு 2.6 தொன் வீதம் கோதுமை உற்பத்தியாகி வருகின்றது.

இமயமலை மற்றும் இந்துகுஷ் மலைகளின் பனிப்பாறை உருகுவதன் மூலம் கிடைக்கும் தண்ணீரை நம்பி வாழ்கின்ற பில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்படுவார்கள். அதேபோல் பல பில்லியன் மக்கள் சீனாவில் பாதிக்கப்படுவார்கள்.

### நகரங்களில் சேரிக் குடியிருப்பு அதிகரிக்கும்



விவசாயத் தொழிலையே நம்பி வாழ்கின்ற மக்களை 70 வீதத்துக்கும் அதிகமாகக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் பாதிப்பு மிகப் பாரதூரமாகவிருக்கலாம்.

ஏற்கனவே மக்கள் அதிகரிப்பைக் கொண்டுள்ள நகரங்களுக்கும் பட்டினங்களுக்கும் கிராமிய மக்கள் பெரும் எடுப்பில் படையெடுக்கத்தொடங்குவார்கள். கிராமப்புறங்களில் வாழ் நிலை பாதிக்கப்படுவதனால் நகரங்களை நாடிச் செல்லத் தொடங்குவார்கள். அதனால் நகரங்களில் கட்டமைப்பு வசதிகள் குறைந்து சேரிக்குடியிருப்புகள் அதிகரிக்கும்.

ஆசியாவில் வியட்னாம், பங்களாதேஷ், இந்தியா மற்றும் சீனா போன்ற தாழ்வான நிலப்பரப்புகளை அதிகம் கொண்ட நாடுகளில் லட்சக்கணக்கான மக்கள் வெள்ளப் பெருக்கினால் தம் வீடுகளை விட்டு வெளியேற நேரலாம்.



### கடல் மட்டம் உயர்ந்துவிடும்

21 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கடல் மட்டம் 40 சென்றிமீற்றர் அளவு உயர்ந்துவிடும். ஆசியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்கள் எண்ணிக்கை 13 மில்லியனி லிருந்து 94 மில்லியனாக அதிகரித்துவிடும்.

தென்னாசியாவில் பாகிஸ்தான், இந்தியா, சிறீலங்கா, பங்களாதேஷ் மற்றும் மியான்மார் ஆகிய நாடுகளின் கரையோரப் பகுதி களில் வாழும் மக்கள் இதில் அடங்குவர் என்று பச்சூரி கூறினார்.

விஞ்ஞானிகளின் மன்று வெளியிட்டுள்ள மன்று வெளியிட்ட அறிக்கையின் சில பகுதிகள் வெளியாகியுள்ளன, அதன்படி:-

வெப்பம் அதிகரிக்கும். 2030 ஆம் ஆண்டளவில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து பகுதிகளில் கடல் மட்டம் உயரும். வரட்சி அதிகரிக்கும். இதனால் பல்வகை உயிர்கள் மற்றும் தாவர வகைகள் பெருகியுள்ளன. Great Barrier Reef என்றழைக்கப்படும் பவளப்பாறை தடுப்புச் சுவருக்கும் ஆபத்து உண்டு.

### பசுபிக் தீவுகள் சதுப்பு நிலமாகும்

தென் பசுபிக் பகுதியிலுள்ள தீவுகள் சதுப்பு நிலங்களாக மாறிவிடக்கூடும்.கடல் நீர் மட்டம் உயர்வதாலும் அடிக்கடி சூறாவளிகள் ஏற்படுவதாலும் இந்நிலை உருவாகும்.

1572 பக்கங்கள் கொண்ட அறிக்கை 441 விஞ்ஞானிகளால் எழுதப்பட்டு பின்னர் பரிசீலிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது. பூகோளம் வெப்பமடைவதால் பூமியில் உயிரினங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை விளக்குவதாக அமைந்த அறிக்கையின் 4 தொகுப்புகளில் இது இரண்டாவது அறிக்கையாகும். பிராந்திய ரீதியாக ஏற்படும் பாதிப்புகள் அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

அறிக்கையின்படி 2020 ஆம் ஆண்டளவில் ஆசியாவில் ஏறத்தாழ 50 மில்லியன் மக்கள் பாதிப்புக்குள்ளாவார்கள். இது 2050 ஆம் ஆண்டில் 132 மில்லியனாகவும் 2080 ஆம் ஆண்டில் 266 மில்லியனாகவும் அதிகரிக்கும்.

### அமெரிக்காவின் மனமாற்றம்

காலநிலை மாற்றம் தொடர்பாக இதுவரை காலமும் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருந்து வந்துள்ள அமெரிக்க அதிகாரிகள் இப்பொழுது மனமாற்றமடைந்துள்ளனர். பூகோளத்தை அச்சுறுத்தும் சவால் ஒன்று உருவாகிவருகின்றது என்று அவர்கள் ஒப்புக்கொள்கின்றார்கள்.

காலநிலை மாற்றம் பற்றி ஆய்வு நடத்தும் சர்வதேச மன்றத்தின் அமெரிக்கப் பேராளர் குழுவின் தலைவர் ஷரோன் ஹேஸ் இது பற்றிக் கருத்து தெரிவிக்கையில்:-

''இது உலக அளவிலான ஒரு சவால் தான். அதற்கு உலக அளவிலான தீர்வு ஒன்று தேவைப்படுகின்றது என்பதை அங்கீகரிக்கின்றோம்'' என்று கூறியுள்ளார்.

உலக வெப்பம் அதிகரித்து வருவதற்கு உலக நாடுகளில் தொழிற்சாலைகள், வாகனப்புகைகள் மற்றும் நிலக்கரிப் புகைகளால் வெளியிடப்படும் 'கிறீன்ஹவுஸ் காஸஸ்' (Green House Gases) என்றழைக்கப்படும் நச்சுவாயுக்களே அதிகக் காரணம் என்று கருதப்படுகின்றது.

இந்த வாயுக்களை வெளியிடும் நாடுகளில் முதல் இடத்தைப் பெறுவது அமெரிக்காவாகும். இந்த வாயுக்கள் பூமியை சூரியக் கதிர்த் தாக்கத்திலிருந்து காப்பாற்றி வரும் ஓஸோன் படலத்தில் ஓட்டைகளை உண்டாக்குவதாகவும் கருதப்படுகின்றது.

பூமி வெப்பமடைவதிலிருந்து காப்பாற்றப்படாவிட்டால் உலகின் பல நாடுகள் பாதிக்கப்படும் என்றும் குறிப்பாக ஏழை நாடுகளையே கடுமையாகப் பாதிக்கும் என்றும் உலகின் உயிர் இனங்களில் மூன்று பங்கு அழிந்துபோகும் சாத்தியமுள்ளதென்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# திரும்பிச் சென்ற அபிவிருத்தி நிதியை மீண்டும் பெற்றுத் தரவிருப்போர் யார்?

## மக்கள் சேவை இந்த லட்சணத்திலா நடைபெறவேண்டும்

''மானிப்பாய் பிரதேச சபைக்கு ஒதுக்கிய நிதி திரும்பிச் சென்றது'' என்ற தலைப்பில் 01.05.2007 இல் உதயனில் செய்தி வெளியாகியது கண்டு கவலையடைந்ததுடன் இதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அல்லது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பதிலளிப்பாளர்களா எனக் காத்திருந்தேன். வலிகாமம் தென்.மேற்கு மானிப்பாய் பிரதேச சபை தற்போது மானிப்பாய், ஆனைக்கோட்டை, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய உப அலுவலகங்களைக் கொண்ட பரந்த - விரிந்த - பெரும் பிரதேசமாகும்.

இவற்றில் மானிப்பாயும் பண்டத்தரிப்பும் பட்டின உப அலுவலகங்களாகவும் ஆனைக்கோட்டை, மாதகல் என்பன சாதாரண உப - அலுவலகங்களாகவும் இயங்குகின்றன. இங்கு மானிப்பாயைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் பிரதேச சபை காக்கைதீவு முதல் மாதகல் கடற்கரை வரை தனது முழுச் சேவையையும் மேற்கொண்டு வருகின்றது.

மானிப்பாய் பிரதேச சபை நீண்ட காலமாகத் தனது மக்களுக்கு தனித்துவமான சேவையை வழங்கி வருகின்ற போதும் -

தனக்கென ஒரு நிரந்தர கட்டடம் இன்றி திரையரங்கின் ஒரு பகுதியில் நிர்வாகம் மற்றும் திட்டமிடல் அலகுகளுடன் சேவை புரிந்து வருகின்றது.

இத்தகைய பின்னணியில்தான் 2005 ஆம் ஆண்டில் வடக்கு- கிழக்கு அவசர கால புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 'நீர்ப்' (Neerp) ஊடாக 20 மில்லியன் ரூபா வுக்குரிய திட்டம் முன்மொழியப்பட்டு அதற்கான நிதியும் உடன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த நிதியைக் கொண்டு மானிப்பாய் பிரதேச சபைக்கு இரண்டு மாடிகளைக் கொண்ட தலைமை அலுவலகம் அமைப்பதற்கு முடிவாகியது.

ஆனால், யாழ்ப்பாணக் குடாநாட்டில் 11.08.2006 அசாதாரண சூழ்நிலை ஏற்படுவதற்கு முன்னரே ஒதுக்கப்பட்ட நிதி கிடப்பில் வைக்கப்பட்டு பயன்படுத்தப்படாதால் (நீண்ட பல மாதங்கள்) எவ்வித செயற்பாடுமின்றி முன்னேற்ற அறிக்கையுமின்றி நிதி திரும்பிச் சென்றதாக வெளியான செய்தி வலி.தென் மேற்கு பிரதேச மக்களை மிகவும் கவலை அடையச் செய்துள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு பல அரச திணைக்களங்கள் நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக நீர்ப், நிக்கொட், ராப், நியாப், நிகாப் போன்றதிட்டங்கள் ஊடாக எண்ணக்கருப் பத்திரங்களை(Concept Papers)




முன்வைத்து நிதி உதவிகளைப் பெறுகின்றன.

இவ்வாறு பெறப்பட்ட நிதி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாமல் திரும்பிச் செல்வது மிகவும் வருத்தப்படவேண்டியது, வேதனைக்குரியது மட்டுமன்றி கண்டனத்துக்குரியதுமாகும்.

மானிப்பாய் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்திற்கு வந்த நிதி மீண்டும் மாகாண சபைக்குத் திரும்பிவிட்டது என்ற செய்தியை அடுத்து மக்களின் [illegible] சுகாதார, சமூக, சுற்றாடல் [illegible] சபைத் தலைவர் சட்டத்தரணி இரா.வசந்தசேனனும், நவாலி எச்.எஸ்.சி.எம்.எவ். தலைவரும் கூட்டாக மாகாண சபைக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் நிதியை மீளப்பெற்றுத் தருமாறு கோரி அவசர கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

இவ்விடயத்தில் வலி.தென்மேற்கு பிரதேச மக்கள் நன்மை அடையக்கூடிய வகையிலும் சிறந்த முகாமைத்துவ சேவைகளை மக்களுக்கு வழங்கவும் மேற்படி நிதி ஏதாவது ஓர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உரிய நிதியைப் பெற்றுக்கொடுப்பது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கடமை அல்லவா.

எனவே மானிப்பாய் பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கு வந்த நிதி திரும்பிச் செல்லக் காரணமாக இருந்த அரச அதிகாரிகள் அவற்றை மீளவும் பெற்றுத்தர முயற்சிப்பார்களா? அல்லது மறந்த கதையாகிக் கைவிடப்படுமா? ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் திரும்பிச் செல்வதற்கு எந்த நொண்டிச் சாட்டைக் கூறினாலும் அதற்கு அவர்களின் அசமந்தப் போக்கே காரணம்.

தமது தரப்பில் இருந்த கவனக்குறைவைக் கருத்தில் கொண்டு இனியாவது மானிப்பாய் பட்டினசபைக்கு உத்தேசிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தைக் கட்டி முடிக்க வேண்டும். பொது நிதி தானே வேறு ஓர் நிறுவனத்துக்கு இடமாற்றப்பட்டுச் சென்றுவிட்டால் எங்கள் பொறுப்பு கழன்றுவிடும் என்று நினைக்கக் கூடாது. பொதுமக்களு[illegible] வாங்குகின்றோமே [illegible] விட்ட தவறைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்குப் பல்வேறு திட்டங்களின் ஊடாக ஒதுக்கப்பட்ட பலவகை நிதிகள் திரும்பிவிட்டன.

தற்போதும் 2007 ஆம் ஆண்டுக்குரிய அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகள் வேதனம் மற்றும் நலச் சேவைகளை அனுபவிக்கின்ற அதே வேளை பொறுப்புடன் இதய சுத்தியுடன் செயற்பட்டால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்வதை ஓரளவு கட்டுப்படுத்தி எமது பிரதேச வளர்ச்சி- அபிவிருத்தியை சிறிதளவேனும் எய்தலாம் அல்லவா?

யாழ்.பல்கலைக்கழகத்தில், அபிவிருத்தி சார் முதுமாணியைக் கற்கும் மாணவர்கள் பிரதேச அபிவிருத்திக்கு வந்த நிதி உதவிகள் திரும்பிச் செல்வதனால் ஏற்படும் பாரிய இடர், அதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் பற்றி ஆராய்ந்துள்ளனர்.

- ராஜாராம்

எமது பிரதேச அபிவிருத்திக்குச் சகல அமைப்புகளும் பல்கலைக்கழகமும் அரசாங்க நிறுவனங்களும் இணைந்து செயற்பட்டால் தென்னிலங்கையில் ஏற்படும் அபிவிருத்தியில் சிறிதளவு வீதத்தினையாவது அடைய வாய்ப்பிருக்காதா? தமிழ்ப் பகுதிகளுக்கு நிதி கிடைப்பதே பெரும் கஷ்டமான காரியமாக இருக்கும்போது கிடைப்பவற்றைச் செவ்வனே பயனுள்ளதாக்குவது சம்பந்தப்பட்ட எல்லோரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

அரசாங்கப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் தாம் மக்கள் சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் என்பதனை மனதார உணர்ந்து செயற்படுவது அவசியம். தங்களுக்குரிய சமூகப் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும். அந்த உணர்வை வளர்த்துக் கொண்டால் இத்தகைய தவறுகள் இடம்பெறுவதைத் தவிர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

An Australian Government Initiative

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் முன் ஏற்பாடு

Australian Scholarships
THE PATHWAY TO EXCELLENCE

ஆஸ்திரேலிய புலமைப்பரிசில்கள்
திறமையை நோக்கிய வழிகாட்டல்

ஆஸ்திரேலிய புலமைப்பரிசில்கள் ஒரு A$ 1.4 பில்லியன் பெறுமதியான ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் முன் ஏற்பாடாகும். 2006இல் ஆரம்பிக்கப்பட்ட இது ஐந்து ஆண்டு காலத்திற்கு மேலாக ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 19,000 புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் இருக்கும் உயர் சாதனையாளர்கள் ஆஸ்திரேலியாவில் உயர் கல்வி கற்பதற்கும் ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்சார் மேம்பாடுகளைப் பெறுவதற்கும் இந்தப் புலமைப்பரிசில்கள் சந்தர்ப்பங்களை வழங்குகின்றது.

ஆஸ்திரேலியாவில் 2008 இல் கலைமாமணி (Master) மற்றும் கலாநிதி (Doctor) பட்டங்களைப் பெறுவதற்கு தகுதியுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து ஆஸ்திரேலிய அரசாங்கம் விண்ணப்பங்களைக் கோருகின்றது.

தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையில் ஒரு சில புலமைப் பரிசில்கள் முனைப்பு விருதுகள் (Endeavour award) என்ற அடிப்படையிலும் வழங்கப்படவிருக்கின்றன.

ஆஸ்திரேலிய புலமைப் பரிசில்கள் திட்டமானது ஒரே தலைப்பின்கீழ் மூன்று முக்கிய புலமைப்பரிசில் திட்டங்களை உள்ளடக்குகின்றது. அவையாவன.

**ஆஸ்திரேலியாவின் மேம்பாட்டுப் புலமைப்பரிசில்கள் (ADS)**

இலங்கை அரசாங்க ஊழியர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். விண்ணப்பதாரிகள் 45 வயதுக்குட்பட்டவர்களாகவும் திறமையான பட்டதாரி மாணவர் (Under graduate) மற்றும் பட்டப்பின் படிப்பாளர் (Post graduate) என்ற தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். மேலும் ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகள் தொழில் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். IELTS இல் 6.0 புள்ளிகளுக்கும் குறையாமல் எடுத்திருக்கவேண்டும்.

புலமைப் பரிசில்கள் முதுமாணி மட்ட கல்வியாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். (ADS) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் புலமைப்பரிசில்களில் அரைப்பங்கு பெண்களுக்கென்றே ஒதுக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பதாரியின் அமைச்சின் ஊடாக 2007 ஜீலை 9ஆம் திகதிக்கு முன்னர்,

*Department Of External Resources,*
*Ministry Of Finance and Planning.*

என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்

**ஆஸ்திரேலியாவின் தலைமைத்துவ விருது (ALA)**
*(Australian Leadership Awards)*

இலங்கையிலும் பிராந்தியத்திலும் வளர்ச்சி வெளிப்பாடு மற்றும் சமூக, பொருளாதார கொள்கைச் சீர்திருத்தங்களில் செல்வாக்குச் செலுத்தவல்ல தலைமைத்துவ பதவிகளை வகிக்கக் கூடிய திறமையுள்ளவர்களுக்கே இந்த புலமைப்பரிசில்கள். ALA புலமைப்பரிசில்கள் முதுமாணி மற்றும் கலாநிதி மட்ட கற்கைகளுக்கு மட்டுமே உரித்தானவை. அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் இருசாராரும் விண்ணப்பிக்கலாம். வெற்றிபெறும் விண்ணப்பதாரிகள் தனித்துவமான தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டமொன்றில் பங்கேற்பவராவார்.

ஆஸ்திரேலிய பல்கலைக்கழகமொன்றினால் நிபந்தனையற்ற முறையில் ஏற்றுக்கொள்ள இணங்கப்படுபவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப தாரிகள் சிறப்புமிக்க பட்டதாரி மாணவர்களாகவும் பட்டப்பின்படிப்பில் கல்வித்துறை சாதனையாளர்களாகவும் இருந்திருக்கவேண்டும். ஆங்கில மொழியில் உயர்மட்ட திறமை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். [குறைந்தபட்சம் 6.5 IELTS அல்லது அதற்கு சமமான தகுதி]

ALAS குறித்த விசாரணைகளுக்கு <ala@ausaid.gov.au> என்ற முகவரி யில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்பங்களை <www.australian scholarships.gov.au> நேரடியாக 31 - ஜூலை 2007 இற்கு முன்னர் அல்லது 16 ஜூலை 2007 இற்கு முன்னர் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

*Scholarships Officer,*
*Australian High Commission,*
*21, Gregory's Rd, Colombo - 07, Sri Lanka.*

**Endeavour Programme** - இலங்கை பிரஜைகளுக்கு பல்வேறு முனைப்புத் திட்டங்களின் கீழ் விருதுகள் உண்டு.

அவைகளாவன:- முனைப்புபட்டப்பின் படிப்பு விருதுகள், முனைப்பு ஆராய்ச்சி பெலோஷிப்ஸ், முனைப்பு நிறைவேற்றுநர் விருதுகள், முனைப்பு சர்வதேச பட்டப்பின் ஆராய்ச்சி விருதுகள், மற்றும் முனைப்பு VET விருதுகள்.

இவ்வகை விருதுகள் விவரங்களை பின்வரும் முகவரியில் பெறலாம்.
<www.australian scholarships.gov.au>

ஆஸ்திரேலிய புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பதாரிகளுக்கு தகவல் தரும் அரங்கு ஒன்று கொழும்பு ஹில்ரன் பிளேஸிலுள்ள ஆஸ்திரேலிய ஸ்தானிகர் பணிமனையில் [வாசஸ்தலத்தில்] (JAIC) 2007 மே 18 ஆம் திகதி 10 மணியிலிருந்து 12 மணி வரை நடைபெறும்.

# தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறுவோரைத் தண்டிக்கச் சட்டம் தேவை

## நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி பிரேரணை

கொழும்பு, மே 13

தேர்தல் காலங்களில் வெளியிடப்படும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகுக்கப்பட வேண்டும் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றத்தில் ஆலோசனை ஒன்றை முன்வைத்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஐ.தே.கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க தனி நபர் பிரேரணை ஒன்றை முன்மொழிந்த பின் அதனை வழி மொழிந்து உரையாற்றும் போதே லக்ஷ்மன் கிரியெல்ல மேற்குறிப்பிட்ட ஆலோசனையை முன்வைத்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும்போது கூறியதாவது:-

தேர்தல் ஒன்று நடைபெறும்போது அரசியல் கட்சிகள் பல்வேறான தேர்தல் வாக்குறுதிகளை முன்வைத்து பிரசாரம் செய்கின்றன. ஆனால் அவை ஆட்சிக்கு வந்தவுடன் அவற்றை அப்படியே மறந்துவிடுகின்றன. மக்கள் அடுத்து வரும் தேர்தல்வரை ஏங்கிக்கொண்டிருக்க வேண்டிய அசாத்திய நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு ஒரு முன் உதாரணமாக அமைந்துள்ளது தான் இன்றைய அரசின் 'மஹிந்த சிந்தனை'

யுத்த நிறுத்த உடன்படிக்கை திருத்தி அமைக்கப்படும். பத்துலட்சம் பேருக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என்றனர். ஒரே மாதத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்றனர். வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்போம் என்றனர். மூடை மூடையாக மஹிந்த சிந்தனையில் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கௌரவமான ஒரு சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்றனர். ஆனால் கடந்த இரண்டு வருடங்களில் 4 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். பத்து லட்சம் பேருக்கு மேல் அகதிகளாகியுள்ளனர்.

***தூதுவர்கள் ஏன் வாயை மூடிக்கொண்டிருக்கின்றனர்?***

நாட்டில் கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள் அதிகரித்து விட்டன. தனி மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இதனை ஐ.தே.க. தலைவர் கூறினால் இதைத் துரோகம் என்கின்றீர்கள்.

சர்வதேச மட்டத்தில் நமது நாட்டின் 160 தூதரகங்கள் இருக்கின்றன. எங்கள் தலைவர் வெளிநாடுகளில் பேசும்போது அங்குள்ள நமது நாட்டு தூதுவர்கள் ஏன் வாயை மூடிக்கொண்டு இருக்கின்றனர்?

அங்கேயே மறுப்பை தெரிவித்திருக்கலாம் அல்லவா? இவர்களால் முடியாது. உண்மையை எவராலும் மறுக்க முடியாது.

ரணில் விக்கிரமசிங்க இலங்கையைப் பாதுகாப்பதற்கே சர்வதேச ஆதரவைத் திரட்டுகின்றார். நாட்டைப் பாதுகாப்பது தான் அவரது கடமை. உங்கள் அரசைப் பாதுகாக்க அல்ல.

எமது நாட்டு உற்பத்திகளில் 65 வீதமானவற்றை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளே இறக்குமதி செய்கின்றன. எமது நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதால் இறக்குமதிகளைத் தடை செய்து விட்டால் தமது நிலை என்னவாகும் என்பதை அரசு உணரவேண்டும்.

எனவே தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதனை நிறைவேற்றத் தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் - என்று கூறினார் லஷ்மன் கிரியெல்ல. (சி)

# தென்னிந்திய வான் பாதுகாப்பை மேலும் அதிகரிக்கிறது புதுடில்லி!

புதுடில்லி, மே 13

வான்பரப்பின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் தாக்குதல் விமானங்களின் எண்ணிக்கையை தென்னிந்தியாவில் மேலும் அதிகரிப்பதற்கும் கண்காணிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்துவதற்கும் இந்தியா முடிவு செய்துள்ளது. புதுடில்லியில் நடைபெற்ற முக்கிய கூட்டம் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் விமானங்களால் இந்தியாவின் தென்மாநிலங்களில் உள்ள அணு உலைகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று இலங்கை விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து இந்தியாவின் இந்த நகர்வு வந்துள்ளது.

அமைச்சரும் தேசிய பாதுகாப்பு விவகாரப் பேச்சாளருமான அமைச்சர் ஹெலிய ரம்புக்வெல புலிகளின் அச்சுறுத்தல் குறித்து கருத்துத் தெரிவித்த ஒரு நாளின் பின்னர், இது பற்றி ஆராய புதுடில்லியில் உயர்நிலைக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி அதற்குத் தலைமை வகித்தார். பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளிவிவகார அமைச்சு செயலாளர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சேகர் தத், விமானப் படைத் தளபதி ஏயார் மார்ஷல் எவ்.எச்.மேஜர் மற்றும் கடற்படை பிரதம அதிகாரி சுரேஷ் மேத்தா ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதேசமயம் இந்து சமுத்திரத்தில் கடமையில் உள்ள கடற்படைக் போர்க் கப்பல்களில் இருந்தும் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக விமானங்களின் வருகையை முன்கூட்டியே வானில் பறந்தபடி எச்சரிக்கக்கூடிய விமானங்களைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வேலணை ஆலயக் குருக்கள் தொடர்ந்து விசாரணையில்

யாழ்ப்பாணம், மே13

வேலணை பெருங்குளம் முத்து மாரியம்மன் ஆலயத்தில் இருந்து கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்ட ஆலயக் குருக்கள், தர்மகர்த்தா சபைத் தலைவர் ஆகியோர் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் உத்தரவுக்கு அமைய இவர்கள் இருவரும் பொலிஸாரால் காங்கேசன் துறையில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

பிரஸ்தாப ஆலயத் தேர் முட்டியில் ஆயுதப் பொதி ஒன்று காணப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகவே இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். (அ-1)

# பண்டத்தரிப்பில்குடும்பஸ்தர் நள்ளிரவு கடத்தப்பட்டார்

சங்கானை, மே13

பண்டத்தரிப்பு பல்சுட்டி என்னும் இடத்தில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் வெள்ளைவானில் வந்தோரால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடத்தப்பட்டார். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திரன் ரகுநாதன் (வயது- 32) என்பவரே கடத்தப்பட்டவர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரகுநாதனின் மனைவி தனது கைக்குழந்தையுடன் கதறி அழுத போதிலும் அவரைத் தள்ளி வீழ்த்திவிட்டுக் கடத்திச் சென்றனர் எனக் கூறப்பட்டது. (அ-1-29)

# பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 13

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் நடத்தும் இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சிக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் இடம்பெறும்.

அபிவிருத்தி உதவியாளர் த. பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'உளநெருக்கீட்டிற்கான சுயமுகாமைத்துவம்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நா. நவராஜீ கருத்துரை வழங்குவார். (1-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் உயர்திரு. பொன்னுத்துரை கமலநாதன் அவர்களின் சேவை நலன் பாராட்டு மலர் -13.05.2007

### கொக்குவில் கிருபாஹர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பிரதம குருவின் ஆசிச் செய்தி

*''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்புடைத்து''*



என்ற வள்ளுவரின் கூற்றிற்கிணங்க ஏழு பிறவிகளுக்கும் ஆன்மாவோடு கலந்து நிற்கும் நிலையான செல்வமாகிய கல்விக்கெனத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்தவரும், புகழ்பூத்த அதிபர்களில் ஒருவருமாகிய உயர்திரு பொ.கமலநாதன் அவர்கள் இன்றைய தினம் பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்கின்றார். அவர் தமது ஓய்வுக் காலத்திலும் கல்விக்காகத் தம்மால் இயன்ற சேவையை ஆற்றவும், குடும்பத்தாருடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று, நீடூழி வாழவும் எல்லாம் வல்ல வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ கிருபாஹர சிவசுப்பிரமணிய சுவாமியை வேண்டி எனது நல்லாசிகளை வழங்கி அமைகிறேன்.

*'லோக சமஸ்தா சுகினோ பவந்து'*

- சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள்.

### அர்ப்பணிப்புடனான அதிபர் சேவை நிறைவுறும் தறுவாயில்...



எங்கள் கல்லூரி அதிபர் பொன்னுத்துரை கமலநாதன் அவர்கள் தனது அர்ப்பணிப்பு மிகுந்த அதிபர் சேவையிலிருந்து இன்று தனது அகவை அறுபது நிறைவில் ஓய்வு பெறுகின்றார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1996 இல் இக்கட்டான காலகட்டத்தில் அதிபராகப் பொறுப்பேற்று, கல்லூரியின் வளர்ச்சிக்காக ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோருடன் இணைந்து அரும்பணியாற்றியவர். அவரின் பதினொரு வருட நிர்வாகத்தில் பழைய மாணவர்களின் அயராத உழைப்பினை, அவர்களின் கல்லூரி மீதான பற்றினை நல்ல முறையில் பயன்படுத்தி கல்லூரியின் பௌதீக வளங்களை அபரிமிதமான வகையில் பெருக்கிட வழிசமைத்த பெருமை அவருக்கே உரியது. எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கிய இராச்சிய கிளையினர் தங்கள் வருடாந்த கலை நிகழ்ச்சிக்கு 2005 இல் முதன்மை விருந்தினராக அழைத்து கௌரவித்தமை அவரது சேவைக்கு கிடைத்த கௌரவம் என்றால் அது மிகையல்ல. அவரது நிர்வாகச் செயற்பாடு கண்டிப்பானதாயினும் மனிதநேயம் மிக்கது. தான் நினைத்ததை துணிந்து செய்து முடிக்கின்ற அவரது இயல்பும் ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான முறையில் எந்த விடயத்தையும் கையாள்வதும் தனித்துவமானது. எமது கல்லூரிச் சமூகத்தால் திரு.கமலநாதன் அவர்களுக்கு கிடைத்த, கிடைத்துக்கொண்டிருக்கின்ற பாராட்டுக்கள், கௌரவங்கள் எல்லாம் அவரது திறந்த மனதுடனான நேர்மையான செயற்பாடுகளுக்கானதே என்பது நிதர்சனமானது. அவரது ஓய்வுகாலம் மகிழ்ச்சிக்குரியதாகவும், அமைதியானதாகவும் அவர் தம் குடும்பத்தினருடன் சிறப்புற அமைய வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

S.V. மகேந்திரன்,
பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.

### ஆர்ப்பாட்டமில்லாத ஓர் அதிபர்



முட்டை ஒன்றை இடும் கோழி கொக்கரிக்கிறது. ஆயிரம் முட்டைகளை இடும் ஆமையோ அமைதியாக இருக்கின்றது. எமது அதிபர் பொ.கமலநாதன் அமைதியானவர். சிரித்த முகத்துடன் காணப்படுபவர். மற்றவர்களின் கருத்துக்களைக் காது கொடுத்துக் கேட்பார். நல்ல கருத்துக்களையும் ஏற்றுக்கொள்வார். பதில் உடனடியாகக் கிடைக்காது. ஆனால், அவரது அடுத்த நடவடிக்கையின் போது அதற்கான கருத்து எவர் சொல்லியிருப்பினும் நடைமுறைப்படுத்துவார். அவரின் வெற்றிக்கு அவரது இந்த அணுகுமுறையும் ஒரு காரணம் என்று சொன்னால் மிகையாகாது.

அவருடன் சேவை செய்யும் வாய்ப்பு எனக்கு இரு வருடங்கள் மட்டுமே கிடைத்தது. நானும் அவருக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கினேன்.

எமது பழைய மாணவர் சங்கத்துடன் நல்ல உறவையே வைத்திருப்பவர். எமது கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பார். நாமும் எமது பூரண ஒத்துழைப்பை வழங்கினோம்.

அவரது ஓய்வுக்காலம் அமைதியாகவும் சிறப்பாகவும் அமைய அவரது சேவை எமக்குத் தொடர்ந்து கிடைக்கவேண்டும் எனவும் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

தம்பிஐயா தேவராஜா,
பொதுச் செயலாளர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி - பழைய மாணவர் சங்கம்.

### கல்லூரிச் சமூகத்தை நேசித்த அதிபர்



கல்விப் பணியில் 35 வருடங்களாக சிறப்புடன் சேவையாற்றி இன்று தனது அறுபதாம் அகவையில் ஓய்வுபெறும் எமது அதிபர் திரு.பொ.கமலநாதன் தான் கற்ற கல்லூரிக்கு சேவையாற்ற வேண்டும் என்ற பெரு விருப்புடன் யூனியன் கல்லூரியிலிருந்து மாற்றலாகி ஒரு தசாப்தத்திற்கு மேலாக கொக்குவில் இந்துவின் அதிபராக மிளிர்ந்தார்.

அவரது அமைதியான ஆளுமை, சிறந்த நிர்வாகத்திறன் போன்றவற்றின் வெளிப்பாட்டினால் கல்லூரி பல வழிகளிலும் வளர்ச்சி கண்டது. செயற்திறன் மிக்க ஆசிரியர்கள் பற்றுதலுடைய கல்லூரிச் சமூகத்துடன் அவரின் சிறப்புடன் ஒன்றிணைந்த செயற்பாட்டினால் கல்லூரி பல வழிகளிலும் வளர்ச்சி கண்டது. பௌதீகவளங்கள் அதிகரித்ததுடன் கல்விச் செற்பாடுகளும் உன்னத நிலையை எட்டியது. அதற்கு மேலாக இணைப்பாடவிதான செயற்பாடுகளான கலைத்துறை, விளையாட்டுத்துறை போன்றவற்றில் தேசிய மட்டத்தில் மாணவர்கள் கலந்து கொள்வதற்கு வழிசமைத்தது. விளையாட்டுச் செயற்பாடுகளில் இவர் கொண்ட ஆர்வத்தினால் யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத் தலைவராக கடமையாற்றி யாழ்.மாவட்ட மாணவர்களின் விளையாட்டு மேம்பாட்டிற்கு பெரும் பங்காற்றினார். கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் தனக்கெனத் தனியிடம் பதித்தார்.

அவர் ஓய்வுபெறும் இன்றைய அவரது பிறந்ததின நன்நாளில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஓய்வு காலம் அமைதியாகவும் சுபீட்சமாகவும் அமைய சகோதர ஆசிரியர்களுடன் இணைந்து இறைவனை வேண்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

R.S. உமாசுதன்,
தலைவர், ஆசிரியர் கழகம், கொக்குவில் இந்துக் கல்லூரி.



## பொன்னுத்துரை கமலநாதன்

B.Com., P.G.D.E. S.L.P.S. - I

**ஆசிரிய சேவை**

*யா/ யூனியன் கல்லூரி - பயிற்சி முன் ஆசிரியர்*
*15.11.1971 - 20.01.1972*
*பலாலி ஆ.ப. கல்லூரி - பயிற்சி ஆசிரியர்*
*21.01.1972 -31.12.1973*
*களு/ஸாஹிரா கல்லூரி - பயிற்றப்பட்ட ஆசிரியர்*
*01.01.1974 14.02.1980*
*யா/யூனியன் கல்லூரி - பயிற்றப்பட்ட ஆசிரியர்*
*15.02.1980 - 31.05.1981*
*யா/யூனியக் கல்லூரி- பட்டதாரி ஆசிரியர்*
*01.06.1981 - 31.01.1993*

**அதிபர் சேவை**

*யா/ யூனியன் கல்லூரி - பிரதி அதிபர்*
*01.02.1993 - 02.03.1994*
*யா/ யூனியன் கல்லூரி - அதிபர்*
*03.03.1994 - 14.09.1996*
*யா/கொக்குவில் இந்துக் கல்லூரி - அதிபர்*
*15.09.1996 - 12.05.2007*

### அமைதியும் அடக்கமும் ஆளுமையும் கொண்ட அதிபர்



யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகச் சேவையாற்றிய திரு.பொ.கமலநாதனின் சேவைகள் நிறைவு பெறும் காலத்தில் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பதவியேற்பதற்கு முன்னர் யா/யூனியன் கல்லூரியிலும் அதற்கு முன்னர் சேவையாற்றிய இடங்களிலும் பெற்ற அனுபவங்களுடனும் வர்த்தகப் பட்டதாரியாக நிர்வாக முகாமைத்துவத்தில் இவர் பெற்ற அறிவும் இணைந்து சிறந்த ஓர் அதிபராக இவரை திகழ வைத்தது. இவர் அமைதியானவர், அடக்கமான சுபாவம் கொண்டவர், அதிகம் பேசாதவர். ஒரு புன்சிரிப்புடன் சகலரையும் இணைத்து விருப்புடன் செயலாற்ற வைப்பவர். 'நிறைகுடம் தளம்பாது' என்ற முதுமொழிக்கு இணக்கச் செயலாற்றி, ஆசிரியர், மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கியவர்.

இரண்டாயிரமாம் ஆண்டின் இடபெயர்வின் போது பாடசாலைச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் வலயத்தின் செயற்பாடுகளை முழுமையாக இயங்கவைப்பதற்கு இடமளித்ததுடன் பொதுப் பரீட்சைக்குரிய சகல வேலைகளையும் செயற்படுத்தவதற்கு உதவியதுடன் வலயத்தின் தமிழ்த் தினப் போட்டிகளை நடத்தி முடிக்க இடமளித்து உதவிய வகையிலும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் நன்றி இவ்வதிபரையும் அவரின் குழாமையும் சேரும்.

இவர் கட்டிக் காத்த இந்நிறுவனம் தொடர்ந்து சிறப்புற வளர உழைப்பது தான் கல்வியாளர்கள் அவருக்குச் செய்யும் உதவியாகும். இவரது இளைப்பாறும் காலத்தில் அவரும் அவருடைய குடும்பத்தினரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று மகிழ்வுடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்கவேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி எஸ்.மகாலிங்கம்,
முன்னாள் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும்
முன்னாள் யாழ்மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும்.

### உன்னத சமூக சேவையாளர்



திரு. பொன்னுத்துரை கமலநாதன் அமைதியாய் அடக்கமாய் ஆற்றலுடன் பணியாற்றுகின்ற ஓர் அற்புத மனிதர். ஒரு நல்லாசிரியராய் நாடு போற்றும் அதிபராய் உன்னத சமூக சேவையாளராய் ஒப்பற்ற கல்வியாளராய்த் தன் பல் பரிமாண ஆளுமையினை வெளிக்காட்டி நிற்கும் இப்பெருந்தகை இன்று புகழ்பூத்த கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியினை நிறைவு செய்து கொள்கின்றார். இவ்வேளையில் அவரை அகமார வாழ்த்த வணங்குகின்ற ஆயிரக்கணக்கானோரோடு நாமும் இணைந்து கொள்கின்றோம்.

திரு. கமலநாதன் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்வகத்தின் பொருளாளராக மிகவும் சிறப்புப் பணியாற்றி வருகின்றார். சமூகப் பணி என்று வருகின்றபோது தன் பட்டம் பதவி அனைத்துக்கும் அப்பால் நின்று யார்க்கும் எளியனாய் யார்க்கும் இனியனாய் யாவரும் போற்றும் வண்ணம் பணியாற்றுகின்ற பெருந்தன்மை இவரது பல் பரிமாண ஆளுமையின் மற்றுமோர் வெளிப்பாடாகும்.

தன் அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெறுகின்ற அவரை முழுமையாய் உள்ளீர்த்துக்கொள்ள எமது வாழ்வக சமூகம் முழு மனதோடு காத்திருக்கின்றது.

கமலநாதன் அவர்களின் பணி வாழ்வு இன்னும் ஆற்றலுடன் மிளிர அவரது அரும்பணிகள் சமூகத்திற்கு இன்னும் பல்லாண்டு காலம்கிட்ட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.

ஆ.ரவீந்திரன்,
தலைவர், வாழ்வகம்.

### பண்புமிக்க அதிபர்



பண்புமிக்க ஓர் அதிபராக ஏழைப்பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக உழைத்தவர், நண்பர் திரு. பொன்னுத்துரை கமலநாதன். நீண்டகாலமாக என்னுடன் பழகிய ஓர் அன்பர். சவால்கள் நிறைந்த காலத்தில் கடுமையாக உழைத்துத் தனது இலக்குகளை நிறைவேற்றியவர். பல பாடசாலைகளும் திரு. பொ.கமலநாதனைத் தமது பாடசாலை அதிபராக்க விழைந்தமை அவரது குணநலனின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. எவருடனும் முரண்பாடுகளின்றி உழைத்த எமது அதிபர் ஓய்வு பெறுவது பெரிய இழப்பானாலும் அவர் தொடர்ந்தும் கல்விச் சமூகத்திற்காக உழைப்பார் என வேண்டி அவருக்கு சகல ஆசிகளும் கிடைக்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

வே.தி.செல்வரத்தினம்,
வலயக் கல்விப் பணிப்பாளரும் மேலதிக மகாணக் கல்விப் பணிப்பாளரும்.

### நவீனத்துவமான முகாமையாளர்




திட்டமிட்ட பாடசாலையின் இலக்கை அடைவதற்குக் கிடைக்கும் சகல வளங்களையும் சிறப்பாகப் பயன்படுத்தி உத்தம வெளியீட்டைப் பெற்று பல்வேறு துறைகளிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியை முன்னிலைப்படுத்திய அதிபர்கள் வரிசையில் தங்களுக்கென ஒரு தடத்தைப் பதித்தவர்களில் திரு. பொ.கமலநாதன் அவர்களும் ஒருவர்.

பாடசாலைப் பணிகளுக்குப் புறம்பாக சமகாலத்தில் பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டிருந்த இவரது ஓய்வு, கல்லூரிச் சமூகத்தை கலங்க வைக்கிறது. இருப்பினும் சேவையில் நியமனம் பெற்றோர் என்றாவது ஒரு நாள் ஓய்வு பெறவேண்டும் என்ற உலக நியதியை அறிந்து ஆறுதலடைகின்றோம். இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல கிருபாஹர சுப்பிரமணிய சுவாமிகள் சகல ஆசிகளையும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

அ. ஆனந்தராஜா,
செயலாளர்,ஆசிரியர் கழகம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

### எமது அதிபரின் காலம் கல்லூரிக்கு வளங்கள் தேடி வந்த காலம்



புகழ்பூத்த அதிபர்கள் பணியாற்றிய பெருமை எமது கல்லூரிக்குரியதாகும். இந்த வகையில் எமது அதிபரும் விதிவிலக்கானவரல்ல.

எமது கிராமத்தவர், பழைய மாணவர், அதிபர் சேவையின் முதற்தரத்தினைக் கொண்டவர் எனப் பல தகைமைகளை உடைய எமது அதிபர் திரு. பொ.கமலநாதன் அவர்கள் கடந்த ஒரு தசாப்த காலமாக கல்லூரியின் தலைமைப் பொறுப்பினை ஏற்று சிறப்பாக வழிநடத்தியுள்ளார். வெள்ளிதிசை கொண்ட அதிபர் என்று எங்கள் எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுகின்ற இவரது காலத்தில் கேட்போர் கூடங்கள், கணினி மற்றும் தொழில்நுட்ப சாதனங்கள் கொண்ட தகவல் தொழில்நுட்ப நிலையம் மற்றும் பௌதீக வளங்கள் எமது கல்லூரியைத் தேடிவந்தன. எல்லோரையும் அனுசரித்து நடக்கும் இவரின் காலம் கல்லூரியின் பொற்காலமாகும்.

எனவே ஓய்வு காலத்தில் எமது அதிபரும் அவரது குடும்பத்தினரும் எல்லா வகையான சிறப்புப் பேறுகளையும் பெற்று சுகதேகிகளாக பல காலம் வாழ எமது கல்லூரி குலதெய்வமாகிய கிருபாஹர சிவசுப்பிரமணிய சுவாமியை வேண்டி நிற்கின்றேன்.

இ.செல்வநாதன் (நகுலன்) J.P.
செயலாளர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதிய அறங்காவலர் சபை.

### சாதனை மிக்க அதிபர்



ஒரு தசாப்த காலம் அதிபராக ஒரே கல்லூரியில் சிறப்பாகக் கடமையாற்றி ஓய்வுபெறுவதென்பதொரு சாதனையாகும். இச் சாதனைக்குரியவர் எமது கல்லூரிச் சமூகத்தின் நன்மதிப்பினைப் பெற்று இன்று கடமையிலிருந்து ஓய்வுபெறும் திரு. பொ.கமலநாதன் அவர்களின் காலத்தில் கல்லூரி என்றும் இல்லாத விதமாகப் பல பௌதீக வழங்களைப் பெற்றுக் கொண்டது. வள்ளல் சுப்பிரமணியத்தினால் வழங்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம், சி.கே.கே.ஞாபகார்த்த மண்டபம் என்பவற்றுக்கு மேலாக ஓர் ஏக்கர் பரப்பளவு காணியும் விலைக்கு வாங்கி பாடசாலைக்கு வழங்கப்பட்டது. நாட்டில் நிலவிய சமாதான சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி இவ்வளங்களையும் மேலும் பல வசதிகளையும் சேர்த்த பெருமை அதிபரையே சாரும். மேலும் கல்லூரியின் கல்வித்தரம் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் அனைத்தும் தொய்வின்றிச் சிறப்புற பேணப்பட்டுள்ளது.

அதிபருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு அவரின் கல்விச் செயற்பாடுகள் தொடர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

அ.பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர்.

### சாதனை படைத்த அதிபர்



யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள புகழ் பூத்த பாடசாலைகளில் ஒன்றான கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக பொ.கமலநாதன் அவர்கள் பத்து வருடங்களுக்கு மேல் சிறப்புடன் பணியாற்றி ஓய்வு பெறுகிறார். மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் அவர் கடமைப் பொறுப்பை ஏற்றுப் பல அரிய சாதனைகளை நிகழ்த்தியமை வியப்புக்குரியதாகும். இவரது காலத்தில் பாடசாலை சகல வழிகளிலும் பெரும் முன்னேற்றம் கண்டது. அமைதியும், மகிழ்வும், புன்னகையும் கொண்ட அவரது நிர்வாகம் என்றும் போற்றுதற்குரியதாகவே இருந்தது. பாடசாலையின் வளர்ச்சியிலும், மாணவர்களின் நலனிலும், ஆசிரியரின் வாண்மை விருத்தியிலும் பெரும் அக்கறை கொண்ட அதிபரின் ஓய்வு பாடசாலைச் சமூகத்திற்குப் பெரும் இழப்பாகும். அவரது ஓய்வு காலம் சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

கே.வீ.குணசேகரம்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர். யாழ்ப்பாணம், நல்லூர்.

**ஆசிரியர்கழகம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BBS இன் வெற்றிகரமான புதிய திட்டம்

BBS இன் தமிழ் மொழி மூலமான பாலர், ஆரம்ப, பாடசாலை ஆசிரியர்களுக்கான சர்வதேச தரத்திலான பயிற்சி

O/L மற்றும் A/L சித்தி பெற்ற மாணவர்களுக்கான
NURSERY PRIMARY TEACHERS TRAINING COURSE

வெளிநாடுகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடரவும் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளவும் கூடிய சர்வதேச தரமிக்க UK அங்கீகாரம் பெற்ற Diploma சான்றிதழ் வழங்கப்படும்

அனுமதிக்கு முந்துங்கள் முடிவுத்திகதி 25.05.07

பாட விதானங்கள்
சிறுவர் உளவியல் Child Physiology
கல்வி உளவியல் Educational Physiology
சிறுவர் அபிவிருத்தி Child Development
கல்விக் கொள்கை மேம்பாடும்
அதன் தரமும் மொழித்திறனும் Language Skills English & Tamil
சித்திரமும் கைவேலையும் Art & Craft

வளர்ந்தோருக்கான மேலதிக ஆங்கில வகுப்புக்கள்
CERTIFICATE IN ENGLISH
DIPLOMA IN ENGLISH
IELTS
மேலதிக விபரங்களுக்கு

BRITISH BUSINESS SCHOOL
இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | ஸ்ரீ பத்மநாதன் இல்லம், பத்தமேனி, புத்தூர். | இல:174, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | இல:552, யாழ்ப்பாண வீதி, ஆவரங்கால், புத்தூர்.
e-mail: british.businessschool@gmail.com

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 20 ★ 04 ★ 1920



இறப்பு 14 ★ 04 ★ 2007

### திருமதி நாராயணசாமி தேவகுஞ்சரம்

(திதி: துவாதசி)

14.04.2007 அன்று அமரத்துவம் அடைந்த திருமதி டாக்டர் நாராயணசாமி தேவகுஞ்சரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.05.2007) திங்கட்கிழமை காலை வல்வெட்டித்துறை, வித்தனை ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, ஊறணி தீர்த்தக்கடற்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அவ்வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறும், மேலும் அவர் நினைவாக நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத் திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வித்தனை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (60441)

குடும்பத்தினர்.
தகவல்: ந. குணேந்திரராஜா.

## ஈராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29 ● 12 ● 1974

விண்ணில் 13 ● 05 ● 2005



### திருமதி திருமகள் கார்த்திகேயன்

B.Sc., M.Sc.

(விரிவுரையாளர், தேசிய கல்வியியற்கல்லூரி, யாழ்ப்பாணம்)

எங்கள் வானத்து எழில் நிலவு
நீ மறைந்து.....
இரண்டாண்டு போனதுவோ?
நீயில்லாக் கும்மிருட்டில்
நெஞ்சம் கனக்கும்
நெடுந்துயரம் குடியிருக்கும்
நீ நடந்த முற்றத்தில்
நெருஞ்சி படர்கிறது
கூடிச் சிரித்த குரல் ஒலி
எம் வீட்டில்
கூரைமுகடெல்லாம்
குயில் ஓசை என ஒலித்து
வாட்டி வதைக்கும்
போய்விட்டாய் அம்மா நீ...
பொட்டோடும் பூவோடும்
போய்விட்டாய் அம்மா நீ;
நீயில்லாத் துன்பம் இங்கு
நீரில்லா மீனானோம்
பூமகளே எம் வீட்டுப் பொன்வண்டே...
நாம் மறையும் மட்டும் உன் நினைவு மறையாது
தெய்வத்திருப்பதியில் உன்திருவதனம்
மகிழ்வுறுக.

(60366)

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவில் துடிக்கும்:
குடும்பத்தினர்.

## சேவை அறிவித்தல்

1.அரைக்கும் ஆலை
1.ஈரஅரிசி மா வறுத்தல் 15/=
2.அனைத்து வகையான அரைத்தல் வேலைகள்
2.சுத்திகரிப்பு நிலையம்
1.மோட்டார் சைக்கிள் 300/=

❋ மில் வேலையில் அனுபவமுள்ளவர் தேவை
சைக்கிள் திருத்தும் ஒட்டுவேலையில் அனுபவமுள்ளவர் தேவை.

தொடர்பு: பிருந்தா மில்ஸ்
இல.18, றக்கா றோட், யாழ்ப்பாணம். தொ.பே: 5745

## மணமகள் தேவை

ஆஸ்திரேலியாவில் P.R. உடைய யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அழகிய இளமைத் தோற்றமுடைய குடும்பப்பாங்கான 37 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு: 0786291963

## மணமகள் தேவை

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த இலண்டனில் படித்துக் கொண்டு (Microsoft professional) தொழில் புரியும் 30 வயது ரோகினி நட்சத்திரம் மகனுக்கு (உயரம் 5'10") லண்டன், நியூஸிலாந்து, ஆஸ்திரேலிய நாடுகளில் P.R. உடைய மணமகள் தேவை.

தொடர்பு: 0786455964,
0115676922.

## தேவை

KEYBOARD (ஓர்கன்) தேவை:
YAMAHA- PSR \ ROLAND\ KORG
வகையிலான கீபோட் உடன்
தேவைப்படுகின்றது.
TP: 077 9103500
(60182)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 70 ஆம் ஆண்டு அனுஷம் 2ஆம் பாதம் (சைவபோசனம்) 5'7" உயரம் அரச உத்தியோகத்துடன் பொறியியல் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ள மணமகனுக்கு நற்பண்புள்ள அழகான மணப்பெண் தேவை. (இசை/ நுண்கலைப்பட்டம் அல்லது இசை ஆர்வமுடையவர்கள் விரும்பப்படும்). தொடர்பு: 026 222 0377.

## வீட்டுடன் காணியும் விற்பனைக்குண்டு

வீரசிங்கம் வீதி, மீசாலை, மதுவன் சன சமூக நிலையத்திற்கு அருகில் 334ஆம் இலக்கத்தைக் கொண்ட 6 பரப்புக் காணியுடன் வீடும், கடையும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
சுசன் களஞ்சியம்
சாவகச்சேரி.

## கோழி இறைச்சி விற்பனை

பிறிமா இறைச்சி வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.
மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

பல மாதகால இடைவெளியின் பின்
விஜய், அசின், வடிவேல் நடித்த
போக்கிரி
(றீல்ஸ்) தினசரி : 11மணி, 3மணி.



## இறைச்சிக் கோழி

ஐஸ் புறொயிலர் இறைச்சி,கல்பேட் இறைச்சி என்பன விற்பனைக்கு உண்டு.
NEW R.S.K. Farm
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம்.

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சி வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம், மணமகன் 38 வயது, இங்கிலாந்து ஆங்கிலேய நிறுவனத்தில் தகுந்த கல்வியுடன் உதவி முகாமையாளர், சகோதரி வயது 40, அழகானவர், இளமைத் தோற்றம், மிகச் சிறந்த சீதனமுடையவர். இவர்களுக்கு மணமக்கள் தேவை. மாற்றுச் சம்பந்தத்திற்கும் விருப்பமுண்டு. தொடர்பு - விளம்பரம் இல., 2969 மே/பா உதயன்.

## நீரிழிவா?

சிறுகுறிஞ்சா - நீரிழிவை குணமாக்கும் - குருதி குளுக்கோஸ் கொலஸ்ரோலைக் குறைக்கும்
2 D Cola இனிக்கும் சீனி இல்லை. பூச்சிய கலோரி குருதி குளுக்கோசை குறைக்கும்.
முடி உதிர்தல் நரைத்தல்
BBG Hair oil சிறந்த நிவாரணி
Grape Wines
பலவகை சுவைத்து ரசியுங்கள்
விலாசம்:
BIO TEC
131/2 பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். தொ.பே: 4590907.

## NOTIFICATION

**ST. JOHN'S COLLEGE, JAFFNA.**
**OLD BOYS' ASSOCIATION**
**ANNUAL GENERAL MEETING**

*The 91th Annual General Meeting of the Old Boys' Association will be held on Saturday the 02nd of June 2007 at 9.30 a.m. in the College Auditorium*

*Members who wish to submit resolutions are kindly requested to do so in writing on or before 25th of May 2007*

*The programme for the day would be published in due course.*

*No individual invitations would be sent*

*Breakfast (Rs. 100/-), Lunch (Rs. 250/-), Breakfast & Lunch (Rs.300/-). Tickets are avilable from the Treasurer Mr. T. Nanthakumaran at the college till 01st Of June 2007.*

*V.Sanjeev*
*Asst. Secretary.*

## 50 ஆவது அகவையில் இந்து விளையாட்டுக் கழகம் - இணுவில்

தனது கொழும்புக் கிளையின் அனுசரணையுடன் நடத்திய
3 ஆவது மாபெரும் மென்பந்துச் சுற்றுப் போட்டியின்
**இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் -2007**

காலம் : இன்று(13.05.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணி
இடம் : இணுவில் மத்திய கல்லூரி மைதானம்
தலைவர் : செ.இலகுநாதன் (இந்து விளையாட்டுக் கழகம்)
விருந்தினர்கள் : பெ.கனகசபாபதி(தலைவர்,யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை)
அ.சதாவந்தன் (முதல்வர், இணுவில் மத்திய கல்லூரி)
மு.பஞ்சலிங்கம் (வைத்திய கலாநிதி, இணுவில்)
த.கந்தசாமி (சமாதான நீதவான்,இணுவில்)
க.இரவீந்திரன் (கிராம சேவையாளர்,ஜே/191)

இந்துவின் கிண்ணத்தை சுவீகரிக்கப்போவது யார்?
திருக்குமரன் வி.கழகம் எதிர் சச்சின் வி.கழகம்
17 வயதுப் பிரிவு ATC வி.கழகம் எதிர் எவரெஸ்ற் வி.கழகம்
காட்சிப்போட்டி: இந்து வி.கழகம் சிரேஷ்ட அணி எதிர் இந்து வி.கழகம் கனிஷ்ட அணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(60176)

இந்து விழையாட்டுக் கழகம்,
இணுவில்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 ★ 12 ★ 1930



உதிர்வு 13 ★ 05 ★ 2002

அமரர்
### தம்பையா கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற எரிபொருள் முகாமையாளர் - புலோலி)

ஐந்தாண்டுகள் ஓடி மறைந்தாலும்
எம் நினைவில் நீங்கள் மறையவில்லை
வாழ்வாங்கு வாழ்ந்திருந்தீர் - பூமியில்
வானுறையும் தெய்வத்திட்டம் சென்றீரோ
உங்கள் ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் நினைவாக இன்று (13.05.2007) ஞாயிற்றுக்கிழமை புலோலி புற்றளை விநாயகர் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

மாவில் வீதி, புற்றளை,
புலோலி தெற்கு, புலோலி.

மனைவி, மக்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 19 ★ 11 ★ 1939



மறைவு 15 ★ 04 ★ 2007

அமரர் குட்டித்தம்பி திருநாவுக்கரசுநாயகம் (K.T. நாயகம்)

(உரிமையாளர்: நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்)

கடந்த 15.04.2007 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன்; இன்று (13.05.2007) ஞாயிறு அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசண நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'தில்லைவாசா'
சுதுமலை, மானிப்பாய்,
(நாயகபாலன் ஸ்ரோர்ஸ்)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மாற்றமடைந்துவரும் சர்வதேச நிலைப்பாடு

வாழ்வியல் இருப்புக்காகவும் நியாயமான உரிமைகள் வேண்டியும் ஈழத்தமிழர்கள் நடத்தும் விடுதலைப் போராட்டத்தை இனிமேலும் பயங்கரவாதச் சாயம் பூசி ஒதுக்கிவிட முடியாது. அந்தப் போராட்டத்தின் பின்னணியில் நீதியான - அர்த்தபுஷ்டியான - நியாயமான - காரணங்களும் அர்த்தங்களும் ஆழமாக உள்ளன என்ற உண்மையை சர்வதேசம் புரிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டது.

இதனால் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் கொழும்பின் போக்குத் தொடர்பாக சர்வதேசத்துக்கு இருந்து வந்த கருத்தியல் நிலைப்பாட்டிலும் பெரிய மாற்றம் தென்படத் தொடங்கியிருக்கின்றது. இந்த நிலை மாற்றப் போக்கைச் சகித்துக்கொள்ளமுடியாமல் சீறுகின்றது கொழும்பு.

பௌத்த - சிங்கள மேலாண்மைவாதச் சிந்தனையில் ஊறிப்போன கொழும்பு அதன் காரணமாக சர்வதேச நியமங்களையும் நியாயங்களையும் புறக்கணித்து இன ஒதுக்கல் கொடூரத்தில் தீவிரம் காட்டுகின்றது. சகல இனங்களினதும் கௌரவமான வாழ்வை வலியுறுத்தி நிற்கும் சர்வதேசம் அந்த நிலைப்பாட்டைக் கொழும்புக்கு உறைப்பாக எடுத்து உரைக்கும்போது அது கொழும்புக்கு சகிக்க இயலாததாகின்றது.

மேற்குலக நாடுகளுக்கு எதிராக அண்மைக் காலத்தில் கொழும்பில் கிளம்பியிருக்கும் கடும் எதிர்ப்புணர்வின் பின்னணி இதுதான்.

பேரினவாதத் திமிரால் - மேலாண்மைச் செருக்கால் - தமிழர்களுக்கு உரியதை வழங்க மறுக்கும் தென்னிலங்கை, தமிழர் தரப்பைக் கட்டுப்படுத்தும் பெயரில் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது. அதனால் சர்வதேசத்தின் கடுங் கண்டனங்களுக்கும் விமர்சனங்களுக்கு ம் அது இலக்காகி உள்ளது.

அண்மையில் இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான உப செயலாளர் ரிச்சர்ட் பௌச்சர், தமது பிந்திய இந்த விஜயத்தின் போது கொழும்பு தொடர்பாகப் புதய ஒரு நிலைப்பாட்டைக் கைக்கொண்டிருக்கின்றார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

வழமையாக தமது இலங்கை விஜயங்களின் போது அமைதித் தீர்வுக்கான சமாதான முயற்சிகளைத் தீவிரப்படுத்தும்படி வலியுறுத்தும் அமெரிக்காவின் ஏனைய மூத்த தலைவர்களைப் போலல்லாது, பௌச்சர் சமாதான முயற்சிகள், அமைதிப் பேச்சுகள், தீர்வுத் திட்டம் ஆகியன தொடர்பாக இலங்கை அரசுத் தலைவரிடம் இம்முறை அதிகம் பேசவில்லையாம்.

மாறாக இலங்கையில் அரசு படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இடம்பெறும் மோசமான மனித உரிமை மீறல்கள் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான கடும் அடக்கு முறை, படுகொலைகள் தொடர்பான நீதி விசாரணைகளில் பக்கச்சார்பற்ற சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளை ஈடுபடுத்தல், நாட்டுக்குள் இடம்பெயர்ந்த அகதிகளுக்கான அவசர - அவசிய மனிதாபிமானப் பணிகளை தங்கு தடையின்றி நடைமுறைப்படுத்தல் ஆகியன குறித்தே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அவர் கருத்துக் கூறியிருக்கின்றார்; எடுத்துரைத்திருக்கின்றார்.

மொத்தத்தல் பௌச்சர் - மஹிந்த சந்திப்பும் பேச்சும் ஒரு முரணியல் நிலையிலான இரு தலைவர்களின் வாத அரங்காகவே நடந்து முடிந்திருக்கின்றன.

கொழும்பின் எதேச்சாதிகாரப் போக்குக்கு எதிராக சர்வதேசம் திரண்டு வருவதை சகித்துக்கொள்ள முடியாத பேரினவாதிகள் மேற்குலகுக்கு எதிராக குரல் எழுப்பத் தொடங்கிவிட்டார்கள்.

புலிகளை மேற்குலகு தடை செய்யவேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் அவ்வாறு புலிகளுக்கு எதிராக மேற்குலகு தடைகொண்டுவந்தபோது அதை 'ஆஹா, ஓஹோ' என ஆரவாரத்துடன் வரவேற்றார்கள்.

ஆனால் இப்போது கொழும்பின் அரச பயங்கரவாதத்தைக் கண்டு மேற்குலகு கொதித்தெழும்போது அதைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களாக அவர்கள் சீறுகின்றார்கள். ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். கொடும்பாவிகளை எரிக்கின்றார்கள்.

ஆனால் இந்த எதிர்ப்பும் அச்சுறுத்தலும் இவ்விவகாரங்களில் ஆணித்தரமான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் சர்வதேச சமூகத்தை அப்படி ஆட்டி அசைக்கப்போவதில்லை என்பது நிச்சயம்.

மேற்குலகு மாத்திரம் அல்ல, நமது அண்டைய வல்லாதிக்க நாடான இந்தியாவும் கூட, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் கொழும்பின் போக்குக் குறித்து கடும் விசனமும் எரிச்சலும் அடைந்திருப்பதாக விடயமறிந்த இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக் கின்றன.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கான யோசனைத் திட்டம் என்ற பெயரில் - இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்டு தோல்வியடைந்து, குப்பையில் தூக்கியெறியப்பட்ட அதே மாவட் சபை முறையிலான அதிகாரப் பரவலாக்கல் யோசனையை ஆளும் ஸ்ரீல.சு.கட்சி முன்வைத்திருக்கின்றமை புதுடில்லியை அதிர்ச்சியிலும், எரிச்சலிலும், விசனத்திலும் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகின் றது.


இந்தப் பின்னணியில் இலங்கை விவகாரம் தொடர்பாக தனது இறுக்கமான நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் கருத்து நிலை அறிக்கை ஒன்றை புதுடில்லி விரைவில் வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு முன்னதாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க கொழும்புக்கான தனது தூதுவர் அலோக் பிரசாத்தை அவசர அவசரமாகப் புதுடில்லிக்கு அழைத்திருக்கின்றது இந்தியா.

கடந்த வியாழனன்று அமெரிக்க பிரதி வெளியுறவுச் செயலாளர் ரிச்சர்ட் பௌச்சரையும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகளின் கொழும்புத் தூதுவர்களையும் ஒன்றாகச் சந்தித்து உரையாடிய இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் அன்று மாலையே கொழும்பிலிருந்து புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இலங்கை விவகாரம் தொடர்பாக மேற்குலகில் ஏற்பட்டு வரும் மாற்றத்தைப் பிரதிபலிப்பது போன்ற ஒரு நிலைப்பாட்டை புதுடில்லியும் இப்போது வகுத்து அறிவிக்கக் கூடிய ஏது நிலைகள் தென்படுகின்றன.

சர்வதேசமே தனக்கு எதிராக திரும்பிவருவதை உணராமல் தன்பாட்டில் தமிழின அழிப்பு - தமிழின விரோத நடவடிக்கை - போக்கில் தீவிரமாக இருக்கின்றது. கொழும்பு.

இந்த வரலாற்றுத் தவறுக்காகக் கொழும்பு பெரிய விலை கொடுக்கப்போகின்றது என்பதை அது காலம் தாழ்த்தித்தான் புரிந்துகொள்ளும் என்றே தோன்றுகிறது!

துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையின் கலை இலக்கிய விழாவில் துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை நிகழ்த்துவதையும் -
விழாவின் பிரதம விருந்தினரான அரச அதிபர் கே.கணேஸ், கலாசார பேரவையின் உப தலைவர் ஆ.சிவசுவாமி(மேலதிக அரசாங்க அதிபர்) மற்றும் பிரமுகர்கள் சபையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம் (படங்கள் : நம்பி)

## சிறப்புற நேற்று நடைபெற்ற மாவட்ட கலை, இலக்கியப் பெருவிழா

நல்லூர்,மே13

யாழ்ப்பாண மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் கலை இலக்கியப் பெருவிழா நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நேற்று சனிக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் உப தலைவருமான ஆ.சிவசுவாமி விழாவுக்குத் தலைமை வகித்தார்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து பிச்சையப்பா ரஜீவன் குழுவினரின் மங்கல இசையும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆசியுரையும் துர்க்கா புரந்தரி இல்ல மாணவிகளின் தமிழ்த் தாய் வாழ்த்தும் மேலதிக அரச அதிபர் சிவசுவாமி யின் தலைமையுரையும் இடம்பெற்றன.

இசைமாமணி தவநாதன் றொபேர்ட்டின் கர்நாடக இசைக் கச்சேரியும் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வும் புத்தூர் அமுதசுரபி கலா மன்றத்தினரின் பட்டிமன்றமும் இடம்பெற்றன.

நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் கலாபூஷணம் ந.க.கணபதிப்பிள்ளை, யாழ். பிரதேச நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ந.செல்வச்சந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையினால் நடத்தப்பட்ட கட்டுரை, சிறுகதை, சிறுகதை விமர்சனம், கவிதை விமர்சனங்கள், காவியம், எழுந்தமானக் கவிதை,சிறுவர்களுக்கான ஓவியம் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் வழங்கினார்.(அ-1-111)

## 3 வார காலத்தில் 3 ஆவது தடவையாக எரிபொருள்களின் விலைகள் உயர்ந்தன!

கொழும்பு,மே 13

எரிபொருள்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் எரிபொருள்களின் விலைகளை அதிகரித்துள்ளது.

அதனையடுத்து இந்திய எரிபொருள் நிறுவனமும் நேற்றுக்காலை முதல் தனது எரிபொருள்களின் விலைகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன விலைகளுக்குச் சமாந்தரமாக உயர்த்தியுள்ளது.

இந்த விலை உயர்வு மூன்று வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது விலை உயர்வாகும்.

புதிய விலை உயர்வுகளின் படி பெற்றோல் லீற்றர் ஒரு ரூபாவாலும் டீசல் இரண்டு ரூபாவாலும் மண்எண்ணெய் ஒரு ரூபாவாலும் விலை உயர்த்தப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பெற்றோலின் புதிய விலை 106 ரூபாவாகவும் சுப்பர் பெற்றோலின் விலை 109 ரூபாவாகவும் டீஸலின் விலை 67 ரூபாவாகவும் சுப்பர் டீசலின் விலை 72 ரூபா 30 சதமாகவும் மண்எண்ணெய் 51 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. (அ-203)

## குடாநாட்டில் எரிபொருள்களின் புதிய விலைகள் நேற்று முதல்

யாழ்ப்பாணம்,மே 13

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு தொடக்கம் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்தில் அவற்றை விற்பனை செய்வதற்குரிய விலைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

புதிய விலைகள் பின்வருமாறு அமையும்:-

பெற்றோல் லீற்றர் 116 ரூபா 50 சதம், மண்எண்ணெய் லீற்றர் 59ரூபா 55 சதம், டீஸல் லீற்றர் 75 ரூபா 55 சதம்.

மேற்படி விலைகளுக்கே குடாநாட்டில் எரிபொருள்கள் விற்பனை செய்ய வேண்டும் என்று தெரிவிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வு யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. (அ-1)

## நிவாரணத்துக்கு அதிக விலையில் சீனி வழங்கப்படுவதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 13

குடாநாட்டில் தனியார் கடைகளிலும் சங்கக்கடைகளிலும் சீனி விற்பனை செய்யப்படும் விலையை விட நிவாரணத்துக்கு வழங்கப்படும் சீனியின் விலை அதிகமாக உள்ளது என பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தனியார் வர்த்தக நிலையங்களிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் ஒருகிலோ சீனி 60 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஆனால் நிவாரணத்துக்கு வழங்கப்படும் சீனிக்கு 70 ரூபாய் கழிக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (202-68)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை - 31 | திங்கட்கிழமை 14.05.2007 |
| திதி: துவாதசி | முற்பகல் : 08.39 |
| நட்சத்திரம்: | ரேவதி |
| | முன்னிரவு : 08.24 |
| [illegible] | : 11.53 - 22.23 |
| ராகுகாலம் | : 07.23 - 08.53 |

## தென்மராட்சிப் பிரதேசத்தில் நடமாடும் மிருக வைத்திய சேவை

யாழ்ப்பாணம், மே 13

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் பணிமனை அதிகாரிகள் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடமாடும் மிருக வைத்திய சேவையை நடத்தவுள்ளனர்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவிலும் இம்மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை கைதடி - நாவற்குளி, நாவற்குளி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் மிருக வைத்திய சேவைகள் நடைபெறவுள்ளன.

நடமாடும் சேவையில் கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுமென கால்நடை வைத்தியர் டாக்டர் ஜீ.இரகுநாதன் தெரிவித்தார். (202 - 207)

## சூட்டுக் காயங்களுடன் இளைஞன் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,மே13

இருபாலை பி.எஸ். வீதியில் ஆண் ஒருவரின் சடலம் சூட்டுக்காயங்களுடன் நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

அப்பகுதி கிராம சேவையாளர் வழங்கிய தகவலை அடுத்து யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார்.

25 வயது மதிக்கத்தக்க கறுப்பு நிற காற்சட்டையும் பழுப்பு நிற சேர்ட்டும் அணிந்திருந்த நிலையில் மீட்கப்பட்ட இச்சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோப்பாய் பொலீஸார் கோரியுள்ளனர். (அ-1)

## சேவைநலன் பாராட்டு

வடமராட்சி,மே13

அரச பணியில் இருந்து ஓய்வு பெறும் வே.வீரபத்திரபிள்ளையின் சேவை நலன் பாராட்டு தேனீர் விருந்து பசார வைபவம் இன்று பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவரது மாணவர்கள், நண்பர்களால் இவ்விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் முன்னாள் தலைமைப்பீட உதவி அரச அதிபராகக் கடமையாற்றிய இவர் ஓய்வு பெறும்வேளை மருதங்கேணி உதவி அரச அதிபராகப் பதவி வகித்தார்.

## தாய் சேய் நலன் பேணல் நிலையத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மே13

வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையில் அமரர் குகராஜா ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள தாய் சேய் நலன் பேணல் நிலையத்தின் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் தலைவர் கா.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக தாய் சேய் நல வைத்திய அதிகாரி திருமதி திருமகள் சிவசங்கர், வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு, மாகாண சுகாதார சேவைப் பணிமனைக் கணக்காளர் க.தனரஞ்சிதராஜன் மற்றும் நா.இராஜசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்வர். (1-202)

## பொதுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே13

வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலய புனர்நிர்மாணத்துக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பங்குத்தந்தை கேட்டுள்ளார். (1-203)

* * *

சுழிபுரம்,மே13

பண்ணாகம் மக்கள் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க 18ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. (203 28)

* * *

இலங்கை கசரோக தடுப்புச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மார்புநோய் சிகிச்சை நிலைய மண்டபத்தில் இடம்பெறும். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60ஆவது அகவை நிறைவில்



கொக்குவில் இந்துவின் மைந்தன்

**பொன். கமலநாதன்**
B.com, PGDE, S.L.P.S I

அதிபர் பணியில்இருந்து ஓய்வு பெறும் பொ.கமலநாதன் அவர்களை இன்று அவரது பிறந்த நாளில் வாழ்த்துவதோடு அவரது ஓய்வு காலம் சிறப்புற எல்லாம் வல்ல கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமியை வேண்டுகின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும்.

## IDM COMPUTER STUDIES (PVT) LTD.
Affiliated University College
Nation's ICT Academy - (Jaffna Branch)

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பம் **Weekday 14.05.2007**
**Weekend 19.05.2007**

| Degree Courses | Diploma Courses |
|---|---|
| * NCC- UK<br>* HND- UK<br>* BIT- COLOMBO<br>* BCS- UK | # Dip. in ICT<br># Dip. in DTP<br># Dip. in BM<br># Dip. in Hardware<br># Dip. in MS. Office<br># Dip in Computerized Accounting<br># Dip. in AutoCAD |
| **International**<br>* MCP (USA)<br>* MCSA (USA)<br>* MCSE (USA) | |
| **WORKSHOPS** | **Certificate Courses** |
| * Hardware & Networking<br>* Internet E-Mail<br>05 DAYS ON LY | VB.Net<br>Java<br>C++<br>VB<br>Internet & E-Mail<br>Web Designing |

ஆண்டு 10, 11 மாணவர்களுக்கு ICT வகுப்புகளும் A/L மாணவர்களுக்கு GIT வகுப்புகளும் ஆரம்பிக்க உள்ளன.

இலங்கையில் உள்ள எமது 38 கிளை நிறுவனங்களில் விரும்பிய இடத்துக்கு, மாணவர்கள் இடம் மாறி பயிற்சி நெறியினை தொடர முடியும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்
216, Navalar Road, Jaffna. Web: www.idm.edu, www.idm.lk Tel: 021-4591398

## ஏசியன் கல்வி நிலையம்
மீசாலை
O/L DAY CLASS
**பிரிவு II ஆரம்பம்**
14.05.2007 (திங்கள்) காலை 8 மணி

கணிதம்: சிவபாதசுந்தரம், ரூபன், ஐங்கரன்
விஞ்ஞானம் : பிரதீஸ் தமிழ்: வாசுதேவன்
சமூகக்கல்வி : ஜெயக்குமார்
சமயம்: கரன் புவியியல்: செந்தூரன்
வர்த்தகம்: சுதா
சித்திரம்: சிவகுமார்
விவசாயம் : பிரபல ஆசிரியர்.

கணித பாடத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கும் விசேட வகுப்புகள் நடைபெறுகின்றன.

நிர்வாகி.


## மரண அறிவித்தல்

### தில்லைநாதன் விஜயநாதன்



பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்தவருமான ஓய்வுபெற்ற தபால் அதிபர் தில்லைநாதன் விஜயநாதன் 11.05.2007 இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன்-வேலாசிப்பிள்ளை தம்பதியரின் அருமைப் புத்திரனும் திருமதி இராஜலட்சுமியின் (ஓய்வு பெற்ற இலிகிதர்- மானிப்பாய் கிறின் வைத்திய சாலை) அன்புக் கணவரும் இராஜனின் (கனடா) அன்புத் தந்தையும் டாக்டர். விஜயலட்சுமியின் (கனடா) மாமனும் பூஜா மற்றும் கிருஷ்சேனின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்வராணி மற்றும் இராஜநாதன் (ஆஸ்திரேலியா), யோகராணி, காலஞ்சென்ற சவுந்தரராணி குணநாதன் (ஜேர்மனி), சிவநாதன் (சுவிஸ்), தங்கநாதன் (கனடா) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருச்சி ஓயாமாரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராஜன் (மகன்).

தொடர்பு:
இந்தியா - 0091 431 2340605.
கனடா - 001 902 7980323


## Pc Park
partner of computer people

வழங்கும் அதிரடி
OFFER
Rs.50,000.00



Intel Pentium 3.0 GHz (2MB 800MHz)
Intel Core 2 Duo Motherboard
512 MB (533MHz) DDR 2 Ram
80 Gb SATA (7200 rpm) Harddisk
Asus Combo Drive
15' Viewsonic / Panora Monitor
ATX 450 W 24pin Power Casing
PS2 Multimedia Keyboard
PS2 Mouse + Pad



கையிருப்பு உள்ளவரை மட்டுமே..

#633,K.K.S Road, Jaffna.
Hotline :0773068998 Tel : 021-222 9581


## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கடுங்காற்று, கடற்கொந்தளிப்பு காரணமாகவே கப்பல் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான பயணிகள் காங்கேசன்துறை வருவதற்காக திருகோணமலையில் காத்திருக்கின்றனர்.

கப்பல் இன்று புறப்படுமா, நாளை புறப்படுமா என்ற அங்கலாய்ப்புடன் தகவல் அறிவதற்காக நாளாந்தம் பிரதேச செயலகத்துக்கு வந்து கூடி நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. (அ-1-151)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் மீதான குற்றத்தை நிரூபிப்பதற்குப் போதிய சாட்சியங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் நீதி மன்றத்துக்கு அறிவுறுத்தியது. அதனை அடுத்தே அவர் விடுவிக்கப்பட்டார்.

விடுதலையான பகீரதனின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி, சட்டத்தரணி தனபாலசிங்கம் ஜெனகனின் அனுசரணையுடன் ஆஜராகி இருந்தார். (அ-1)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா கணேசு

ஸ்ரேசன் றோட், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கணேசு நேற்று (12.05.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் அன்னபூரணத்தின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

தகவல்:
க.வேலழகன்.
(சமுர்த்தி உத்தியோகத்தர்)

### சண்முகம் வீரசிங்கம்



(ச. நீ, அரச மொழி பெயர்ப்பாளர், ஓய்வுபெற்ற நிர்வாக உத்தி. - கல்வி வலயம் வலிகாமம், பிரதேச செயலகர் - கோப்பாய், பிரதேச செயலகர், தென்மராட்சி, கௌரவ செயலாளர் - கைதடி பேற்று, முருகன் ஆலயம் கௌரவ செயலாளர், நாட்டகர் பெத்தான் வைரவர் ஆலயம், உப தலைவர், சைவ ஐக்கிய சங்கம், கைதடி).

கைதடி தெற்கைச் சேர்ந்த சண்முகம் வீரசிங்கம் 10.05.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தில்லைப்பிள்ளை தம்பதியரின் மகனும், தெட்சணா கைலாயபதியின் பாசமிகு கணவரும் ரூபினி (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவரூபன் மற்றும் சிவாஜினி, தவராஜினி (ஜேர்மனி) ஆகியோரது பாசமிகு தந்தையும் சிறீகரன் (ஜேர்மனி), தயாபரன் (மலேசியா), நரேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரது மாமனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் ஓய்வுபெற்ற ஆசிரியைகளான முத்தம்மா, சிவபாக்கியம், காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் நாகேஸ்வரி (ஆலோசக மருத்துவமாது - முல்லைத்தீவு), புஸ்பமலர் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்லையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற கிராமிய வங்கி முகாமையாளர்) மற்றும் சிவசிதம்பரம் (ஓய்வு பெற்ற பரிசாரகர்), சிவபாலன் (டென்மார்க்), நாகேஸ்வரியம்மா, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (முகாமையாளர், ப.நோ.கூ. சங்கம் கைதடி) மற்றும் விக்கினேஸ்வரன் (சுவிஸ்), சிவபாக்கியம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், கந்தையாவின் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தி. யாழ்) சகலனும் விநோதன்,விசாளினி, விதுர்சிகா, அபிஷாளினி, சங்கீதன், நர்த்தனா ஆகியோரது அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,கைதடி. தகவல்: மனைவி.

### திருமதி செந்தாமரைச்செல்வி தவராஜசேகரம்



அரசடி வீதி, நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செந்தாமரைச் செல்வி தவராஜசேகரம் 11.05.2007 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் தவராஜசேகரனின் அன்புமனைவியும் சொலமன்- காலஞ்சென்ற மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் சுகன்யா, ரதியா, கஜரூபன் ஆகியோரின் பாசமிகு தாயும் இன்பராசா, டொம்சிராணி, காலஞ்சென்ற அருள்ராசா, ஆனந்தராசா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.05.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### சுப்பிரமணியம் சண்முகராஜா
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகராஜா நேற்று (12.05.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - கனகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் நடராஜா-பவளம் தம்பதியரின் அன்பு மருமகனும் சிவயோகசிந்தாமணியின் அன்புக் கணவரும் இந்துஜா (K.H.C A/L 2006 Maths) லக்சனா (K.H.C A/L 2007 Maths ), சயனுதா (K.H.C Grade 10) சண்முகதாஸ் (K.H.C Grade 9) சண்முகதீஸ் (K.H.C Grade7) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரோஜா, சந்திரதேவா, சத்தியநேசன், சத்தியபாலன், சந்திரசேகர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சரஸ்வதி, விமலாதேவி, மகேந்திரன், பாலசுந்தரம், தவராஜலிங்கம், தேவராசலிங்கம், தனபாலசிங்கம், காசலாதேவி, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தேவராசா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2007) ஞாயிற்றுக் கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லதில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீதிராஜா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி நித்தியானந்தன் செல்லம்மா



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நித்தியானந்தன் செல்லம்மா 12.05.2007 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா -ராசம்மாவின் அருமை மகளும் காலஞ்சென்ற முருகுப் பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் நித்தியானந்தத்தின் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்- கண்டி CCபாடசாலை, பண்பிளை மகாவித்தியாலயம், மானிப்பாய் சோதி வேம்படி) அன்பு மனைவியும் ரஜனி (எழுதுவினைஞர்- பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), நடேசானந்தன் (நியூஸிலாந்து), ராகினி (பிரான்ஸ்), சிவானந்தன் (கனடா), நளாயினி (ஆசிரியர்- சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்.) முருகானந்தன் (ISA-விசேட கல்வி, வலிகாமம் கல்வி வலயம்), சுலோஜினி (இந்தியா- ஆசிரியை, சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம், ஊர்காவற்றுறை, சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்), தேவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சுந்தரம் (மத்திய மின் நிலையம் -சுன்னாகம்), சிவானந்தன் (பிரான்ஸ்), சந்திரசேகரன், தர்மகுணபாலசிங்கம் (இந்தியா), சுதாமதி (நியூஸிலாந்து), அருந்ததி, யமுனா (கனடா), அனுஷா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் கௌசிகா, மதுரகா, காயத்திரி, நிரோஜன், ரடேஸ், காயத்திரி, நிஷாந்தன், தமிழினி, நிர்மலானந், துஷாரா, தாட்சாயினி, முகுந்தன், விதுஷாயினி, மதுஷாயினி, கம்சத்வனி, சஜீவானந், சோபானந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2007) திங்கட்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

140/10. 4ஆம் குறுக்குத் தெரு. (வேம்படி வீதி)
யாழ்ப்பாணம். சிவலிங்கம் வைத்தியசாலை முன்பாக

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.